# முரசொலி

வார இதழ்

3 அணா

கருணாநிதி


முரசு 1 | சென்னை | 16 — 7 — 54 | வெள்ளி | ஒலி 16


# இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?






முரசொலி மும்முனைப்போர் நினைவு இதழ்.




திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் நாற்பதாண்டுகளுக்கு மேலாக, எதிர் நீச்சலிட்டு வரும் புரட்சி இயக்கத்தைக் கண்டபேரியார்ராமசாமியின் படைக் கலன்களில் ஒன்று. அவர் வேண்டுமானால் அதனைக் கோடரியின் காம்பு என்று காய்ந்து கூறலாமே யொழிய, தி. மு. க. அவருடைய படைக் கலன் என்ற உள்ளத் தூய்மையுடனேயே பணியாற்றிக்கொண்டு வருகிறது. பேரியார் திராவிடருக்குத்தந்த அறப்போர் உள்ளம், துவக்க கால முதல், தி. மு. கழகத்திடம் இருக்கிறது--வளரவும் செய்கிறது.

தி. மு. க. இன்று அடைந்துள்ள செல்வாக்கும் நன்மதிப்பும் அதன் பால் அன்பு கோண்டு பணியாற்றும் ஆயிரமாயிரம் இளைஞர்கள் கண்டேடுத்த கருவூலமாகும்.

பேச்சும் எழுத்தும், பாடலும் கூத்தும், பலரையும் ஈர்க்கும் தன்மையுடையனதான், எனினும்........என்று நண்பரும் இழுத்தாற்போல் பேசினர்——காரணம், தி. மு. கழகத்தை நடத்திச் செல்பவர்களில் பெரும்பாலோர் வாலிபர்கள், ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே ஊஞ்சல் அமைத்துக் கோண்டு ஊசலாடும் நடுத்தரக் குடும்பத்தினர். இவர்கள் களம் என்றால் அஞ்சி ஓடுவர், என்றே பலரும் கருதினர்.

ஜூலைப் போராட்டம் இந்த எண்ணம் எவ்வளவு போய்யானது என்பதை எடுத்துக் காட்டிவிட்டது.

மும்முனைப்போராட்டம் மகத்தானதோர் சம்பவமாகி விட்டது. வெற்றியும் கிடைத்திருக்கிறது. வீரர்களின் எண்ணிக்கை எவரும் எதிர்பார்த்ததைவிட அதிகம் என்பதை நாடே அறிந்து கோண்டு விட்டது.

போராட்டக் காதையை விளக்கிடவும், ஈடுபட்டோர்க்குப் பாராட்டுரை வழங்கிடவும் 'முரசோலி' சிறப்பிதழ் வெளியிடுவது கண்டு மகிழ்கிறேன்.

களம் காணாமல், செய்திகளைச் சேகரித்துத் தோகுத்தளிக்கும் நிலை அல்ல, 'முரசோலி'க்கு.

அதன் ஆசிரியர் கல்லக்குடி போர்த் தளபதியாகப் பணியாற்றிச் சிறை சேன்றவர். எனவே, போர் பற்றிப் பெருமிதத்துடன் பேசிடும் உரிமை கோண்டவர்.

சேரன் செங்குட்டுவனே 'சிலப்பதிகாரம்' தீட்டுவது போல, களம் கண்ட கருணாநிதியே இம்மலர் தருகிறார்; மகிழ்க; மலர், மணம் தரும், மணம் மேலும் பல அறப்போருக்கு நம்மை எல்லாம் தகுதி உடையராக்கும் என நம்புகிறேன். பெற்ற வெற்றி பெருமைக்குரியது என்பதை 'மலர்' காட்டும்; அதைவிட முக்கியமான பாடம், இனிப்பெற வேண்டிய வெற்றிகள் யாவை, யாங்கனம் பெறல் வேண்டும் என்பதாகும்.

விடுதலைப் போர் துவக்கிவிட்டோம்—வீரமரபினில் உதித்தோம் என்ற எண்ணத்தை உறுதுணையாகக் கோண்டு. இனி நமது ஒவ்வோரு நடவடிக்கையும், நாம் மேற்கோண்டுள்ள மாண்புள்ள இலட்சியத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்குவிப்பதாக இருத்தல் வேண்டும்.

'முரசோலி' இத்துறையில் மேத்தப் பயன்படவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் அனைவருக்கும் என் வணக்கம்! அறிவாற்றல் மிக்க இந்த அணிவகுப்பைக் காணவும், அதனுடன் பழகவும் வாய்ப்புப் பேற்றது, என்னைப் புது மனிதனாக்குகிறது! வாழ்க வீரர்கள்! வளர்க வீரம்! வெற்றி பல பேற்று, இன்பத் திராவிடம் காண்போம், வாரீர்!

## வாழ்க! வாழ்க !!

●

"போருக்குப் போய் வருகிறேன் தாயே" என்று அன்னையிடம் கைகூப்பி விடைபெற்றுச் சென்றவன்-திரும்பி வரும்போது-வாடா மகனே! என்று வாழ்த்திய தாயை வணங்கிடமுடியவில்லை; காரணம் ஒரு கையில்லை-அதை அவன் கல்லக்குடியிலே பறிகொடுத்து விட்டான்-அந்த சந்தனம் ஜோசப், வாழ்க! வாழ்க!

★

வாள் எடுத்துப் போர் புரியும் திறனிருந்தும் — வம்பர்களின் துடுக்கடக்க அறப்போர்க் கேடயம் ஏந்தி களம் புகுந்த தூத்துக்குடி முருகேசனின் கால் அறுத்து களிப்பு கோண்டனர் காகபட்டர் ராணுவத்தார்! அந்த முருகேசத் தோழன் வாழ்க! வாழ்க!!

★

எம் தோழருக்கும்—என் நாட்டுக்கு இல்லா விடுதலை எனக்கு எதற்காக என்று நீதிமன்றத்துக் கூண்டில் நின்று துடித்துக்கேட்ட இளந்தோழன் — ராஜூ என்ற சேபாஸ்டின்—தன் குறியிடத்தில் துப்பாக்கித் தோட்டாவைத் தாங்கி துவண்டுபோனான்; தூய்மையற்றோர் துரைத்தனத்தில்! அந்த அன்புத்தம்பி வாழ்க! வாழ்க!

★

கல்வித் திட்டப் போராட்டத் தலைவர் ஈ. வெ. கி. சம்பத்–போர் திறம்பட நடைபெற பணியாற்றிய சென்னை மாவட்ட தீரர்கள்—மாவட்ட செயலாளர் **கண்ணபிரான்** –நாட்டினரின் வாழ்த்துக் குரியவர்கள்—வாழ்க வாழ்க!!

★

கல்லக்குடி அறப்போரில் இரண்டாவது தலைவராக இருந்து பணியாற்றிய சிந்தனைச் சிற்பி **சிற்றரசு**, அடக்குமுறைக்கு ஆளான கவிஞர் **கண்ணதாசன்**, போராட்டம் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைத்த திருச்சி மாவட்ட வீரர்கள் — மாவட்ட செயலாளர் அம்பில் **தர்மலிங்கம்** அனைவரும் நாட்டினர் வாழ்த்துக்குரியவர்கள். வாழ்க வாழ்க!!

## வெட்டுப் - பாறையில்

●

ஜூலை 15! ஒரே நாளில் ஐயாயிரவர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். 94ரவுண்டுகள் சுட்டனர் — சுட்டனர் — சுட்டுத் தீர்த்தனர். சுந்தரத் திராவிடத்தை சுடு காடாக்கி மகிழ்ந்தனர். ஆறு பிணங்கள்— அவை மிதக்கும் ரத்த ஆறுகள்- அங்கமிழந்த தங்கங்கள் அறுபதுக்கு மேற்பட்டோர்! வீரர் அணிவகுப்பை வெட்டுப் பாறைக்கு இழுத்துச் சென்ற வேதியர் பெம்மான் ஆட்சி— அய்யோ பாவம்; கொட்டு முழக்கோடு கொள்ளித் தீயோடு கோலாகலமாகக் கடைசிப் பயணத்தைத் துவக்கிவிட்டது!

சென்றனர் பகைவர்!
வென்றனர் திராவிடர்!

என்று நம் முரசம் முழக்குவோம் வாரீர்!

★



வாழைக்குக் குலை போல் வர்ணாஸ்ரமத் தலைவர் ஆச்சாரியாருக்கு புதிய கல்வித் திட்டம் வந்துதித்த காலை, திராவிட முன்னேற்றக் கழகம் களம் புகுந்தது அந்தக் களத்தின் தலைமைப் பதவி யேற்று சீரிய நல் வெற்றியை நம் சிந்தை மகிழும் விதத்தில் அளித்த தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள்.

# தலையங்கம்

சென்னை [16—7—54] வெள்ளி

## கரை காண்போம்!

சென்ற ஆண்டு இதே நேரத்தில் செந்தமிழ்த் திருநாடு செங்குருதி மணக்கும் காடாகத் திகழ்ந்தது.

இன்று வெளியிலே உலவுகிற வீரர்கள் எல்லாம் அந்த நேரத்தில் சிறையிலே வாடிக்கிடந்தனர்.

இன்று சிலர்தம் நினைவு நாள் கொண்டாடப்படுகிறது, நெஞ்சில் எழும்பும் சோகத்தை அடக்கிக் கொண்டு!

அவர்கள் எல்லாம் சென்ற ஆண்டு இந்த நேரத்தில் சாவைப் பற்றி நினைக்காமலே நடந்து கொண்டிருந்தனர்.

ஒரு ஆண்டு உருண்டுவிட்டது; திராவிடத்தில் போர்ப் புயல் வீசி—அதை யடக்கிட அரசியலார் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டு—அதன் காரணமாக திராவிட மாதாவின் மடியிலே சுருண்டு விழுந்த பிணங்களும்—அறுந்து விழுந்த அவள் அருந்தவப் புதல்வர்களின் அங்கங்களும் கணக்கிலடங்கா!

மூன்று முனைகளிலே படையை ஏவினோம் தடையை இடறினோம். 'கடையை விரித்தோம்; கொள்வாரில்லை' என்ற சோகச் சிந்துடன் காகபட்டரின் கல்வித் திட்டம் வீடு திரும்பியதைக் கண்டோம். ஒரு முனை வெற்றி!

கள்ளத்தால் நெருங்கிடும் கயமையாளரே—வெல்லத்தால் வார்த்ததில்லை எமதுயிர்—நல் உள்ளத்தால் எண்ணிவிட்டோம்—அள்ளத்தான் குறையுமோ, எமது ஆர்வம்—என ஆர்த்தெழுந்து, பள்ளம் போய் விழுகின்ற பாய்ச்சல் நீரது போல் கல்லக்குடி நோக்கிப் பாய்ந்தெழுந்தோம்—கணிசமான வெற்றி! களம் அமைப்பரோ எனக் கண்ணடித்து சிரித்து—அமைத்தபின் களம் அமைத்தனரோ என வெதும்பித் திரிந்த உன்மத்தர்கள் நாணுகிற அளவுக்கு நாம் பெற்றிட்ட வெற்றி!

அரசியலுக்கு ஒரு அரிச்சுவடி உண்டு—அந்தப் பாலர் பாடத்துக்குத்தான் பண்பு என்று பெயர்—பலவும் கற்ற பண்டிதர் அதையும் கற்று மறந்தார். மறந்ததை நினைப்பூட்ட—மமதையாளர்கள் வீழ்ந்த சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிக் காட்ட—நேருவாயினும் எந்த மேருவாயினும்—அவர் கொள்ளும் பொல்லா ஆணவத்தைப் பொடி செய்வோம்—ராணுவம் சிறினும் அஞ்சிடோம்—இழுக்கு துடைக்காது துஞ்சிடோம்—அயலவர் பால் "மானம் தந்திடு" எனக் கெஞ்சிடோம்-மானம்; திராவிடர்க்கே உரியது; அதைக் காத்திடும் விடுதலை கானம் அதோ கேட்குது—கெடுதலையாளர் கிலி கொண்டிடும் அளவுக்கு கேட்குது—என முழங்கியபடி மூன்றுவது அணி வகுப்பு களம் புகுந்தது—அந்த அணி வகுப்புக்கு நாடெல்லாம் களம்தான்! அயல் நாட்டார் ஏடெல்லாம் புகழ் மணக்கும் ஆசிய ஜோதியைக் கப்பிவிட்ட கிரகணத்தை அகில உலகுக்கும் அறிவிக்கும் புது முறைக் கருவியானது அந்தக் களம். அதிலும் வெற்றி! வெற்றி! வீணர் படை விம்மி அழும் அளவுக்கு மகத்தான வெற்றி!

வெற்றிச் சிந்து பாடிக்கொண்டு நிற்கிறோம்—வீரர்கட்கு வணக்கம் செலுத்தியபடி நிற்கிறோம்—கடமை முடிந்துவிட்டது வேறு காரியத்தை கவனிப்போம்—என்ற நிலையிலே அல்ல! கிடைத்திருக்கும் வெற்றிகள் எல்லாம் ஆணவம் படைத்திருப்போரின் ஆதிபத்ய பீடத்தை அடியோடு அகற்றிவிட்ட பின் கிடைத்தவை அல்ல!—அந்த பீடத்தை அசைத்திட முடியும் என்ற நம்பிக்கை தோன்றிவிட்டதற்கு அந்த வெற்றிக் கொடிகள் நல்லதோர் அடையாளம்—சிறந்ததோர்

கொலம்பஸ் புள்ளினம் பறப்பதைக் கண்டான் — பூரிப்பு கொண்டான்; கரை விரைவில் கிட்டும் என்ற நம்பிக்கையும் பெற்றான். இதோ நாம்; புள்ளினம் பறப்பதைப் பார்த்துவிட்டோம்-பல நாள் விடுதலைக் கப்பலிலே படாதபாடுபட்டுப் பயணம்நடத்தும்நாம், சுதந்திரக்கரை,அருகேதானிருக்கிறதுஎன்ற சுவையான சேதியைப் பெறுகிறோம்—புள்ளினம் பறக்கிறது—ஆகவே கரை அருகேதானிருக்கிறது என்று கப்பல் தலைவன் கூறுகிறான்—அந்தத் தேனினுமினிய செய்தி காதில்விழுகிறது-கண்ணெதிரே புள்ளினமும் தெரிகிறது!

கரை கண்ட நேரத்திலேதான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கப்பல் தலைவர் கட்டளையிடுகிறார்.

அனைவருமே மேல் தளத்தில் நின்று கரையைக் கண்டிட ஆசைப்பட்டால் கரையும் தெரியாது—கப்பலும் கரை போய்ச் சேராது. மேல் தளத்தில் நிற்பவர் நிற்க வேண்டும்—கரை வந்துவிட்டதா என்று கூறிட—கப்பல் நேர் வழி செல்கிறதா என கவனித்திட அவர்கள் நிச்சயம் தேவை! அதற்காக அவர்கள் தாங்கள்தான் கரையைக் கண்டோம், கீழ்த்தளத்திலே நின்று கடும் காற்றுக்கும்—கொடும் பிராணிகளுக்கு மிடையே கப்பலை ஓட்டிவந்தவர்களுக்கு அதில் பங்கு கிடையாது என எண்ணிடவும் கூடாது! அப்படி எண்ணித்தான் அத்துணை பெரிய காங்கிரஸ் கப்பல் வெறும் காகிதக் கப்பலாக மாறிவிட்டது.

புதிய நாட்டின் பொலிவு தெரிகிறது—அதைக் கண்டிட தமக்கிருந்த வலிவும் புரிகிறது—பொலிவும் வலிவும் பூரிப்பு தருவதாய் அமையாமல் போட்டிப் புகைச்சல்களுக்கு இடம் அளிப்பதாய் அமைந்திருந்தால் கொலம்பஸ் புதிய கண்டம் தந்திருக்க மாட்டான். அதை எண்ணித்தான், நமது தலைவர்—பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா—**"பொலிவு கண்டு மயங்கி பொறுப்பை மறப்பதும், வலிவு கண்டு மயங்கி வம்புக்கு நிற்பதும் தற்கொலைத் திட்டமாகும்."** என்று "நம்நாடு" வாயிலாக அறிவித்துள்ளார். "திராவிடநாடு" இதழிலும் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஆமாம்—தோழர்களே! உண்மைதான்—நாம் கேட்கும் புதிய நாட்டின் பொலிவு தெரிகிறது—அதைக்காண நமக்குக் கிடைத்த வலிவும் புரிகிறது—அந்தப் பொலிவும் வலிவும் பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தப்படக்கூடாது என்ற அண்ணாவின் அறிவுரையும் காதில் விழுந்து—கருத்தில் பதிந்திட வேண்டும்.

கரை காணும் அக்கரையுடையவர்கள் அனைவருக்கும் இந்தக் கருத்துரை அவசியம்—மிக அவசியம்! வெற்றித் திருநாள் கொண்டாடும் இந்த நேரத்திலே அனைவர் இதயத்திலும் இடம்பெற வேண்டிய பொன்னுரை—அது! மறவாதீர்! மறவாதீர்!! அண்ணாவின் உரை கேட்போம்—கரை காண்போம்—களிப்படைவோம்!

## போர்வீரனின் இலட்சிய கீதம்!

★

**நான் ஆசைப்படுகிறேன் — எதிரியின் முகாமிலிருந்து பாய்ந்து வரும் கணை, முதலில் என் மார்பைத்தான் துளைக்க வேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன்.**

**நான் பொறாமைப் படுகிறேன் — வ. உ. சிதம்பரமும் திருப்பூர் குமரனும், தில்லையாடி வள்ளியம்மையும், தாளமுத்து நடராசனும், உடையார் பாளையம் வேலாயுதமும், நெல்லிக் குப்பம் மஜீதும், வடசென்னை பாண்டியனும், லால்குடி நடராசனும். இலட்சியத்துக்குப் போராடி அதனால் உயிர் தந்தனரே — அந்த நல்ல வாய்ப்பு எனக்கு கிட்டவில்லையே என்று தாங்காத அளவுக்குப் பொறாமைப் படுகிறேன்.**

**நான் முதலிடம் தேட முனைகிறேன் — தாயகத்து விடுதலைப் போராட்டத்தில் — இறுதியாக அமையும் களத்தில் — பிணம் விழ நேரிட்டால் — அந்த முதல் பிணம் என் பிணமாகத்தான் இருக்க வேண்டுமென்று முதலிடம் தேட முனைகிறேன். நான் புகழை நேசிக்கிறேன் — "அவன் புகழையே விரும்பாத புனிதனப்பா" என்ற புகழை அல்ல! நாட்டை மீட்டிடும் உணர்ச்சி அவனுக்கு ஒரு வெறியாக அமைந்து விட்டது — பித்தன் போலப் பேசுகிறான் — வெறிநாய் போலக் கத்துகிறான் — என்றெல்லாம் பலர் கூறினாலும், விடுதலை வெறி பிடித்தவர் பட்டியலிலே நானுமிருந்தேன் — அதற்காக இறந்தேன் — என்ற சரித்திரத்தின் தூயவரிகளை நான் இப்போதே கற்பனை செய்து முத்தமிட விரும்புகிறேன—அந்தப் புகழ் வேண்டா மென்று கூறிடவே மாட்டேன்.**

**நான் சுகவாசியாக வாழ விரும்புகிறேன் — மதவாதிகளின் பொய்க்கூற்று மெய்யாக [illegible] 'வீரசொர்க்கம்' என ஒன்று இருந்தால் அங்கே சுக வ[illegible] வாழ்ந்திட விரும்புகிறேன்.**

# திரும்பிப் பார்க்கிறோம்

தங்கவேலர்

விடுதலைபுரிவாசியின் இலட்சியக் குரல் உலகதிர ஒலித்த நேரம். தூங்கிய புலி விழித்து சிலிர்த்து நின்ற காட்சி. பூக்காட்டை சுடுகாடாக்கத் திட்ட மிட்ட சூது மதியினர் திருவிடத்தின் சொந்தக் காரர்களின் உரிமை முழக்கத்தைக் கேட்டு உள்ளமும் உடலும் நடு நடுங்கிய அந்த நாள்தான் ஜுலை 15! எண்ணங்களிலே தெளிவு ஏற்படாத குறைமதி படைத்தோர் எக்காளமிட்டுக் கிடந்தனர்...படை பல மிக்க அதிகார வர்க்கத்தினரை நோக்கி இந்தச் சின்னஞ் சிறியவர்கள் போர்க் கொடி உயர்த்துகிறார்களே!......பரிதாபத்திற்குரியவர்கள். பார்! பார்! ஓரே நாளில் அடித்துத் துரத்தி அவர்களின் பூண்டையே ஒழித்து விடத்தான் போகிறார்கள்...என்றெல்லாம் களிப்பு மொழி பேசிக் கிடந்தோர் ...எரிமலை வெடித்துச் சிதறியதைப் பார்க்கத்தான் செய்தனர்.

இழிவச்சொல்...அதை நீக்கித் திருத்து! இழிமொழி பேசிய பெரிய மனிதரே, அந்த விஷ மொழியை வாபஸ் வாங்கு!

அழிவு தரும் கல்வித் திட்டத்தை ஒழித்துக் கட்டுங்கள்... என்ற இன முழக்கம் இலட்சிய கீதமாக ஒலித்துக் காட்டப் பட்ட போது அதிகார வர்க்கம் விடன்கை பூத்தது. வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு என ஆட்சியாளரைப் பார்த்துத் தெளிவாகவே கூறினோம். ஊரெங்கும் பாரெங்கும் நமது இலட்சிய விளக்கத்தை விரித்துப் பிடித்துப் படித்தோம். இறுதியாக ஆட்சியாளர் நம்மிடம் மோதிப்பார்க்கவே உள்ளத்தில் ஆசை கொண்டவர்களாகி யிருந்தனர்.

இதயத்திலே ஆணவப் போக்கும், தம்மிடம் படை பலமும் இருக்கிற தென்ற காரணத்தால் உரிமை முழக்கம் கிளப்பிய காளையர்களை மிக ஏளனமாக மதித்தனர். கெடுமதியாளர்கள் கொடுமை பல புரிவரேயென அஞ்சி விடுதலைவாசிகள் பதுங்கி விடவில்லை. எந்த ஒரு நாட்டு விடுதலை வீரனும் ஆதிக்க வாதியைக் கண்டு மிரண்டு அஞ்சி விட்டதாக கதை கூட இல்லாத போது ...சீறிவந்த புலியதனை முறத்தினாலே—அடித்துத் துரத்திய சிங்கார மறத்தியின் பரம்பரையா ஆர்ப்பரிப்பாளர்களைக் கண்டு அசந்து விடப்போகிறது! திட்டத்தை அறிவித்து விட்டு செயலிலே இறங்கினர் திருவிடத்தார். திகைப்பும் — திண்டாட்டமும் ஆட்சியாளருக்கு. விடுதலை வீரர்களோ போர்ப் பரணி பாடி நாடெங்கும் பவனிவந்தனர். பைத்தியக் காரனின் கையிலேயிருக்கும் கூர்வாளும் —ஆதிக்கக் காரனின் வசமிருக்கும் படைபலமும் ஒன்றுதானே! என்ன செய்கிறோம்...அதன் விளைவு என்ன என்பதை எண்ணிப் பாராமலே ஆதிக்கம் தனது படைபலமேனும் வேட்டை நாய்களை நம் மீது விரட்டித் துரத்தியது.

அலை அலையாகத் திரண்டு வந்த திராவிடர் [illegible]

புக்கு ஆளாகி சிறைச் சாலைக்குள்ளே இழுத்துப் பூட்டப் பட்டது. அவர்கள்-ஆமாம்;அந்த சத்தியசீலர்கள் — அகிம்ஸா ஆட்சியின் அவதாரங்கள் கைது செய்தது ஓரிருவரை,அல்ல;ஆயிர மாயிரவரை... நாட்டின் பெரும் பகுதியினரை— நல்லறிவாளர்களை காராக் கிரகத்திலே தள்ளி மூடினர். வாய் பிளந்து நின்ற சிறைச் சாலைக்குக் கூட மூச்சுத் திணறி விட்டது. அமைதியான முறையிலே அறப் போர் தொடுத்த வீரர்களை சிறையிலே பூட்டி அழகு பார்ப்பதோடு மட்டும் ஆதிக்க வாதிகள் திருப்தியடைந்து விடவில்லை. பலப் பலரை துப்பாக்கியால் சுட்டு வீழத்தினர். குண்டு வீச்சைமலர்ச் செண்டாகப் பாவித்து இரத்தக் குட்டையிலே மிதந்தனர் இலட்சிய வீரர்கள்.

சூதுமதியோ சுரண்டல் எண்ணமோ கொண்டவர்களல்ல... இலட்சியம்ஒன்றையேஇதயத்தில் தாங்கி அறப்போர்க் களத்திலே குதித்தனர் கொள்கைக் குமரர்கள்; அவர்களை — அந்த நல்லவர்களை அராஜகத்தில் அழித்தது ஆணவ ஆட்சி. தங்க ரோஜாவை மண்ணிலே தள்ளி மூடினர். செந்தாமரையை மிதித்துக் கசக்கிய குருடனைப் பற்றி நாம் கவலைப் படவில்லை. சீரழிந்த செந்தாமரைகளைப் பற்றித்தான் கண்ணீர் சிந்தினோம்.

விடுதலை புரிக்குச் செல்லும் வழிநெடுக பாதையில் மலர் தூவப் பட்டிருக்குமென கற்பனை செய்து வைத்தவர்களல்ல நாம். மலையளவு எதிர்ப்புகளும்...அலை அலையான தொல்லைகளும் தொடர்ந்து வரத்தான் செய்யும் என்பதைப் புரிந்து கொண்டிருப்பவர்கள் தான் என்றாலும்உதிர்ந்தது விட்ட நட்சத்திரங்களைப் போல அந்த லட்சிய மணிகள் ஆதிக்கத்தால் வீழ்ந்து விட்டதை நினைக்கும் போதெல்லாம் திருவிடத்தாரின் கண்கள் குளமாகத்தான் செய்யும்.

ஆளத் தெரியாதவர்களிடமிருந்து ஆபத்தை எதிர் பார்த்துக் கொண்டுதானே யிருக்கவேண்டும். அதுபோலத்தான் ஆதிக்க வாதிகளிடமிருந்தே கிளம்பிய எதிர்ப்பு அம்புகளை எதிர்நோக்கி தாங்கிக் கொண்டோம். எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள்தானே விடுதலை வீரர்கள். அப்படித்தானே உலகத் திரம் கூறுகிறது. அகில உலகி விடுதலை முழக்க மிட்டுக் [illegible]

என்ன பரிசுகளைத் தந்ததோ அதே பரிசுகளைத்தான் ஆதிக்கக் காரர்கள் நமக்கும் அளித்தார்கள். பாரெங்கும் சமாதானத் தூது அனுப்புவார்கள்...எங்கள்நாட்டுக் கீடு எந்நாடு என்று பரணி பாடுபவர்கள்...பாரத நாடு மணித்திரு நாடு என்று தமக்குள்ளேயே பூரித்துப் போவோரின் ஆட்சியிலே தான் படுகொலை — இரத்தக்காடு. கொலையும் கொள்ளையும் புரியும் நோக்கத்தோடு கூடிக் கிடந்தவர்களை சுடவில்லை-அடித்துத் துரத்தவில்லை! இலட்சிய வாதிகளைச் சுட்டனர். யார்? 'நாமிருக்கும் நாடு நம தென்பதறிந்தோம்' — என்று முன்னர் இசை பாடி மகிழ்ந்தவர்கள். அடக்கித்தான் தீருவேன் —என்று கர்ஜனையிட்ட ஹிட்லர் கூறவில்லை! பாரத புத்ரர்கள் கூறுகிறார்கள் — அடக்கி ஒடுக்குகிறேனென்று வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டி யடித்ததாகக் கூறுபவர்கள் புதிய ஏகாதிபத்தியத்தலைவர்களாகி ஆதிக்கத்தைத் துவக்குவதுதான் ஆச்சரியத்தைத் தருகிறது. காசாயம் கட்டி வேஷமிடுவோரின் நிலைபோலாகி விட்டது தேசீயம் பேசுவோரின் போக்கு! ஆதிக்கக்காரர்கள் எந்த வேடமிட்டு உலவினாலும் இறுதியில் விடுதலை வாசியின் காலடிபணிந்துதான் தீர வேண்டும்.

என்னதான் துப்பாக்கிகளும்—பீரங்கிகளும் குவிந்து கிடந்தாலும் இலட்சியத்தை மிக இலகுவிலே விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. குணக் குன்றுகள்—கொள்கைக் குமரர்கள் விடுதலைப் படையிலே லட்சோப லட்சமாக அணிவகுத்துக்கிடக்கும் போது மாணிக்க மலைகளைப் பெயர்த்துக் கொடுத்து பேரம் பேசினாலும் தூயவர்களின் இதயங்களைத் தீயவர்கள் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது. இன்று சிறையிலே தள்ளிப் பூட்டலாம். காலிலும், கரத்திலும் பாரச் சங்கிலியைப் போடலாம். ஆனல் கொள்கையை... நாடு பிரியவேண்டும்.....என்ற தாகத்தை யாராலும் அழித்து விட முடியாது. துப்பாக்கியிலிருந்து பறக்கும் குண்டு உடலைத்தான் புண்ணாக்கும்...முடிந்தால் உயிரைத்தான் குடிக்கும். அதற்காக திராவிடரின் இதய ஒலி அடங்கி விடவா போகிறது! இந்த உண்மையைத்தானே ஆட்சியாளர்கள் அன்று நேரிடையாகவே கண்டு கொண்டார்கள்...அடக்க முடியாத—அழிக்க முடியாத ஒரு இயக்கம் என்பதை. இன்று எங்கு [illegible]

எடுத்துக் கொண்டாலும் திருவிடத்தாரின் முன்னேற்றம். இந்த முன்னேற்றத்தின் முன்னே போடப் பட்ட முட்டுக் கட்டைகள் எவ்வளவோ! முட்டுக் கட்டைகளைத் தாண்டி வெற்றி பெற்றுக் கொண்டேதான் வருகிறோம். வெற்றிப் பட்டியல் நீளுகிறது! நம்மை — நமது கலைகளை அழித்தொழிக்கத் திட்ட மிட்டவர்கள்...கர்ஜனை புரிந்தவர்கள்... ஒழித்துக் கட்டி விட்டுத்தான் மறுவேலை என்று வீரம் பேசியவர்களின் விலாசத்தைக் கண்டு பிடிப்பதே கஷடமாகப் போய் விட்டது இன்று. ஆதிக்க மிருந்தால் எதையும் செய்து விடலாமென்ற துணிவு ஏற்படுவது சில சபல புத்திக்காரர்களின் இயல்புதானே. அதுபோலே 'நல்ல சமயமடா' என்று சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தினர். ஆனல் ஆசை நிராசையாகி விட்டது. கனவு நினைவாகவில்லை. கட்டிய கோட்டை இடிந்து, அந்த இடிந்த கோட்டைக்குள்ளேயே புதைந்து கொண்டார்கள். ஒரே நாள் ராஜாவின் தெருக்கூத்து போலாகி விட்டது நம்மை நோக்கி தோள்தூக்கியவர்களின் நிலை. பத்துக்கும் மேற்பட்டவர்களைச் சுட்டுத் தீர்த்தார்கள். ஆயிரமாயிரவரை அடித்து சித்ரவதை செய்து சிறை கூண்டிலே தள்ளினார்கள், காட்டுக்குணம் படைத்த 'கனம்கள்'. இதனலெல்லாம் நமது திட்டத்தைத் தகர்த்தார்களா? இல்லை அதற்குமாருக அவர்களின் திட்டங்களைத்தான் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். நாம் எது கூறினோமோ அது நடந்தது! கர்ஜனை புரிந்தவர்கள் எங்கே?...மக்கள் சக்தி அவர்களை துரத்தியடித்து

[ 13-ம் பக்கம் ]

## "குடும்பபாசம் குன்ருமல்........"

*இந்தப் 'போர்' வெறும் பூ பறிப்பது போன்றது, என்று எண்ணத்தக்க வகையான பெரும் போர் நடத்தியே பிறப்புரிமையைப் பெற்ருக வேண்டும் என்ற உண்மையை மறவாதீர்—அந்தத் தியாகத்துக்கு நம்மை எல்லாம் தயாராக்கும் பயிற்சிதான், மும்முனைப் போர் என்பதை உணர வேண்டுகிறேன்.*

*ஜுலை 15-மும்முனைப் போருக்கான முதல் முழக்கம்--இந்த அறப்போரில் நாம் காட்டிய ஆற்றல், எங்ஙனம் கிடைத்தது, என்பதை எண்ணிப் பாருங்கள்—வலிவூட்டும் அந்த 'குடும்ப பாசம்' குன்ருமல் குறையாமலிருக்கவேண்டும்*

*அறப்போர் வீரர்காள்! வாழ்த்துகிறேன்! நீவிர் அரும்பணியாற்றிப் பெற்றுத்தந்த வெற்றிக்காக, என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.*

வண்ணை

"காங்கிரஸ்"—எவ்வளவு அழகான சொல்! அழகான சொல்மட்டுமா—அடா, அடா எத்தனை தலைவர்கள்—தொண்டர்கள் இக் கூடாரத்திலேதிரண்டிருக்கின்றனர். எவ்வளவு தூய்மையான தொண்டு. அந்நிய ஆதிக்கத்திலிருந்து இந்தியத் துணைக்கண்ட மக்கள் அனைவரும் விடுபட்டு நல்வாழ்வில் திகழ எத்தகைய அரும்பாடு; தேசிய காங்கிரசிலேசேர்ந்துபணியாற்றுவதே பொது வாழ்வில் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய அதிக வாய்ப்பன்றோ; ஆதலின் நாமும் அவ்வியக்கத்திலே சேர்ந்து தொண்டாற்றுவோம் என்ற உறுதி கொண்டு திராவிடத்தின் தலை சிறந்த கொள்கைக் கோமானை வெள்ளுடை வேந்தன் தியாகராயர் அவர்கள் இந்திய தேசிய காங்கிரசின் ஜீவ நாடிகளில் ஒன்று எனக் கருதப்படும் அளவுக்கு அந்நாளில் 1916-ம் ஆண்டுவரையில் பணியாற்றினர்.

அவர் மட்டுமா—தென்னாட்டு அரசியல் களஞ்சியம் என்று போற்றப்பட்டு பாட்டாளி மக்கள் கால வரையின்றி உழைத்துழைத்து உருக்குலைந்து வந்த கொடுமையை ஒழித்து வேலை நேரத்தை சட்ட பூர்வமாக நிர்ணயிப்பதற்கு (சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில்) முதல் முதல் போராடி ஆவன செய்த டாக்டர் டி. எம். நாயர் அவர்களுந்தான் தேசிய முகாமிலே முன்னணி வீரராக நின்று கடமையாற்றினர்.

எனினும் இவ்விரு தலைவர்கள் மட்டுமல்லாது இவர்களைப் போன்ற மற்ற தலைவர்களும் தேசிய முகாம் என்பது தென்னாட்டின் வாழ்வை சீர்குலையச் செய்யும் வஞ்சக வலையாகும் என்று முரசு கொட்டினர். வெள்ளை ஏகாதிபத்தியத்தை மிரட்டி தங்கள் இனத்தாரின் ஏகபோக வாழ்வு சரிந்துவீழ்ந்து விடாமல் பாதுகாக்க, பார்ப்பனர்களும் வட நாட்டு முதலாளிகளும் சேர்ந்து அமைத்துக் கொண்ட கூட்டு பேரக் கூடாரமே காங்கிரஸ் என்பதை பறைசாற்றினர்.

தியாகராயர்—டாக்டர் நாயர் திராவிடத்தின் இரு கண்கள்—அந்நாளில் தங்களது கருத்துக்கு ஏற்பட்ட பெரும் எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் தேசியமுகாமைவிட்டு, நீதிக் கட்சியை நிறுவினர். திராவிட சமுதாயத்தின் உரிமைக்காக போராடுவதே—தென்னாட்டு மக்களின் உண்மையான தேசியத் திருப்பணியாகும் என்பதை மக்களுக்கு அறிவுறுத்தினர். இவர்களது அரிய முயற்சியால் 1917-ம் ஆண்டு பொதுவாக இந்தியத் துணைகண்டத்திலும், குறிப்பாகத் தென்னாட்டிலும் ஓர் அரசியல் விழிப்பு—புத்துணர்ச்சி — உறங்கிக்கிடந்த பார்ப்பனரல்லாத திராவிட இனமக்களிடையே ஏற்பட்டதெனில் மிகையாகாது.

திராவிட சமுதாயத்திலே —





பட்ட வகுப்பு மக்களின் உரிமைக்கு, தென்னாட்டைப் பொறுத்தவரை முதன் முதலில் அடிகோலியது நீதிக்கட்சியும் அதன் தலைவர்களான டாக்டர் நாயர், தியாகராயர், டாக்டர் நடேசனார்போன்றவர்களெனின் அது தவறல்ல.

அத்தலைவர்கள் அமைத்த பாதை வழியே சென்று பனகல் அரசர், அறிஞர் எஸ். முத்தையா போன்ற தலைவர்கள் அரசியலில் பார்ப்பன ஆதிக்கத்தை முறியடித்து—எல்லா மக்களுக்கும் ஓரளவு வாழ்வுவளம்பெறும் திட்டங்களை நிறைவேற்றினர்.

நாங்கள் காங்கிரசிலேசேர்ந்து பணியாற்றினேம்; ஆனால் எங்களது தொண்டு — காங்கிரசின் பேரால் பார்ப்பனர்களின் ஏகபோக வாழ்வுக்குப் பயன்படுகிறதேயல்லாது— இந்நாட்டுக்குரியவர்களும்—வாழ்ந்து இன்று வீழ்ந்துள்ளவர்களுமான நம் திராவிட சமுதாய மக்களின் நலிந்த வாழ்வை நிமிரச் செய்யவில்லையே என்று மனவேதனைப் பட்ட அத்தலைவர்கள்—காங்கிரசிலிருந்து விலகி நீதிக்கட்சி—பார்ப்பனரல்லாதார் இயக்கம், என்ற மகத்தான சக்தியை திரளச் செய்து—அதன் காரணமாய் திராவிட சமுதாயம் ஓரளவு தலைகிமிர்ந்து நிற்கத் தகுதியுடையவர்களாக ஆக்கப்பட்ட மறுமலர்ச்சியை அவர்கள் வாழ்நாளிலே கண்டனர். தங்களது குறிக்கோள் முழுதும் வெற்றியடைய பெரும் சக்தியைத் திரட்டித் தந்து மறைந்தனர்.

அந்த மகத்தான சக்தி எது? தோழர்களே — திராவிடத்தின் அரசியல் வரலாற்றை நன்குணர்ந்த எவரும் அம்மகத்தான சக்தியால் ஏற்பட்ட சம்பவங்களை மறந்துவிடமுடியாது.

அந்த பெரும் சக்திதான் சுயமரியாதை இயக்கம் ஆகும். தென்னாட்டு அரசியலிலே தலைவிரித்தாடி வந்த பார்ப்பன ஆதிக்கத்தை — நீதிக்கட்சி— பார்ப்பனரல்லாதார் இயக்கம், மட்டந்தட்டியது போலே சுயமரியாதை இயக்கம் மக்கள்



லேவேரூன்றி வளர்ந்திருந்த ஆரியம் என்ற விஷப்புதரை அழித்தொழிக்க முற்பட்டது. நீதிக்கட்சி வகுத்த சில ஆக்கத் திட்டங்களை செயல் முறையில் கொண்டுவர பெரியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, இலட்சியவாதிகளான, சவுந்திரபாண்டியனர், அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, கைவல்ய சாமியார், மாயவரம் நடராசன், நாகைமணி, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், அறிஞர் ஆர். கே. சண்முகம், அன்னை நாகம்மையார் போன்றவர்களால் வளர்க்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் பெருந்துணையாய் நின்று தீவிர பணியாற்றியிருக்கிறது.

திராவிடச் செம்மல்களான தியாகராயரும், டாக்டர் நாயரும் தூவிய வித்து — தேசிய முகாமிலேயிருந்து தூய்மையான தொண்டாற்றிய பெரியார் அவர்களையும் தோழர்கள் எஸ். வி. லிங்கம், எஸ். ராமநாதன், பொன்னம்பலனர், மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் அம்மையார் ஆகிய ஏராளமான வீரர்களையும் — அக்கூடாரத்தை விட்டு வெளியேறச் செய்தது. சுருங்கக் கூற வேண்டுமானல் தியாகராயர் —நாயர்—டாக்டர் நடேசனர் ஆகிய பெருமக்கள் கண்ட பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு சுயமரியாதை இயக்கமே காரியனகவும், நாளடைவில் சுயமரியாதை இயக்கம் கண்ட நமது பெரியார் ராமசாமி அவர்களே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின்-(நீதிக்கட்சி) தலைவராகவும் நின்று, திராவிடத்தை அடிமை கொண்டுள்ள தீயசக்திகளை எதிர்த்துப் போராடினர்.

இக்கட்டத்தில், காலம்சென்ற நமது தலைவர் பன்னீர் செல்வம் அவர்களின்தொண்டும், திராவிடதின் வளங்களில் — செல்வங்களில் உயிர் நாடியான — நாமனைவரும் பெருமைப் படக்கூடிய தற்குஅஸ்திவாரமாய் உள்ள, ஏன் திராவிடத்திற்குத்தனிச் சிறப்பை அளித்து வரும் நமது அண்ணா அவர்களின் தொடர்பும் பெரியார் அவர்கட்கு பார்ப்பனர்

கத்திற்குக்கிட்டியதானது அரிய வாய்ப்பென்று கூறின் மிகையாகாது.

1934-ம் ஆண்டு முதல் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலே ஓர் புதிய சக்தி அரும்புவிடத் தொடங்கியது.

அச்சக்தியின் வளர்ச்சிதான்—1939ம் ஆண்டிலே பார்ப்பனரல்லாதார் இயக்கமும் நீதிக் கட்சியும் அந்நிய ஆதிக்கத்தை விட்டோடச் செய்யும் பெரும்பணியில் ஓரளவு பங்கு கொண்டது என்று திட்ட வட்டமாகக் கூறிக் கொள்ளும் அளவுக்கு நீதிக் கட்சியின் வரலாற்றிலே புதிய அத்தியாயத்தைத் தீட்ட முதல்

## சூளுரைப்போம்!

கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதில் எங்களுக்கு—தி. மு. கழகத்தவருக்கு மட்டும்தான் பங்கு என்று நான் சொல்லமாட்டேன்; அது அரசியல் அநாகரீகம்! திராவிடர் கழகத்துக்கும் பங்குண்டு; காமராஜருக்குண்டு; சட்டசபை காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு; சட்டசபை திராவிடருக்கும், கம்யூனிஸ்டு கட்சியினருக்கும்—ஏன்—ஆதித்தனருக்கும் கூட உண்டு; இத்தனை பேருடைய பலத்தால்தான் அந்தக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட முடிந்தது என்றால், அது ஒரு வெறும் காக்கையாகவா இருக்க முடியும்? காக்கை ரூபத்திலிருந்த ஒரு பயங்கரப் பறவை அது என்றுதானே பொருள்?

—அண்ணா

காரணமாயிருந்தது. 1938-ம் ஆண்டு இறுதியில் உலகப் போர் மூண்ட சமயத்தில்—காங்கிரஸ் மந்திரி சபைகளனைத்தும் ராஜிநாமா செய்ததற்கேற்ப — நம் மாநிலத்திலிருந்து ஆச்சாரியார் அமைச்சர் குழுவும் ஆட்சி பீடத்தை விட்டோடியது.

எப்போது சமயம் வரும் பதவியை எட்டிப் பிடிக்கலாம் எனக் கொட்டாவி விட்டிருந்த முத்தண்ணுக்கள் முன்னேடி வந்தனர். தலைவர் பெரியார் அவர்களை எப்படியும்இணங்க வைத்து விடலாம் என்று இறுமாந்தனர். இறுதியாக அறிஞர் அண்ணா அவர்களின் திட்டப்படி—பெரியார் அவர்கள் உறுதியாக நின்று நீதிக் கட்சி பதவி ஏற்காது என்றும், பொதுவாக இந்தியத் துணை கண்டத்தில் நிரந்தர முகாம் அமைத்துக் கொண்டுள்ளதாகக் கருதும் அந்நிய ஆதிக்கம் வெளியேற வேண்டும் என்றும் திராவிடத்தை அதன் உரிமையாளர்களிடம் அளிக்க வேண்டுமென்றும் [illegible] பதவி பேறை

# அந்த நாள்!

## தாங்குப்பழம்


அந்த நாள்-ஜூலை 15-மறக்க முடியாத நாள். திராவிடத்தின் தியாகத் திருநாள். திராவிட முன்னேற்றக் கழகம், தீரர்களின் கூட்டம்—வீரர்களின் கோட்டம் என்பதை நிரூபித்துக் காட்டிய நாள். மும்முனைப் போர்—முடியுமா, சாதாரண ஒரு சத்தற்ற கூட்டத்தால் நடத்திக் காட்ட? ராமாயணப் பிரசங்கத்தை ரேடியோவில் செய்ய வேண்டிய வாயும், 'சக்ரவர்த்தி திருமகன்' தீட்டி மகிழ வேண்டிய கைகளையுமுடைய ஆச்சாரியார், ஒரு சமுதாயத்தையே பலியிடக் கொண்டுவந்த புதிய கல்விதிட்டத்தைஎதிர்த்து ஒரு உரிமைப் போர்-மானமுள்ளவர்கள் நாங்கள்—மாமிசப் பிண்டங்களல்ல, வடவனின் பெயரால் தென்னாட்டில் ஒரு இடமா! அதுவும் தமிழனின் கல்லக்குடி—வடவனின் டால்மியாபுரமா? அதற்காக ஒரு மானங் காக்கும் போர்! 'சிறுபிள்ளைத்தனமான' நேருவின் பேச்சை பொறுக்க முடியாத தமிழர்கள் நெஞ்சம்—அந்த அடாத சொல்லுக்காக, ஒரே வார்த்தைக்காக, அதிருப்தி தெரிவிக்கும் முறையில் ரயில் நிறுத்தப்போர்! இந்த மூன்று போராட்டங்களையும் ஒரேநாளில், அந்த ஜூலை 15-ல் நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்.

புதுக் கல்வித்திட்டமா—அதை நாங்களும்தான் கண்டிக்கிறோம் என்று சொன்னவர்களுண்டு. கத்திமுனை எழுத்தாளர்கள், குத்து ஊசி எழுத்தாளர்களெல்லாம் 'பத்திரிகைகளில் தங்கள்' காகிதப் போரை முடித்துக் கொண்டார்கள். முன்னணி சேர்ப்போம்-எங்கள் பின்னாலே வாருங்கள் என்று அழைத்து அழைத்து அலுத்துப் போய் அந்த ஆயாசத்தோடே போரை முடித்துக் கொண்டவர்களும் உண்டு. இந்தா பத்துப்போர் — இறங்குகளத்துக்குள்ளே என்று கூற வக்கற்ற கட்சிகளெல்லாம் தங்கள் வாயாலே போரை முடித்துக் கொண்டன. வரிசைக் கிரமமாய் தளபதிகள்-அவர்கள் தலைமையில் அணி அணியாய் தொண்டர்கள், இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என எக்காளமிட்ட வீரர் பட்டாளம்—தி. மு. கழகம்தான் சர்க்காரை சமருக்கிழுத்து சாரை சாரையாய் சிறை புகுந்தது. பொறுமைக்காரர்கள் பொச்சரிப்புக்காரர்களுக்கு இது கண்ணில் படாத காட்சி; கண்டாலும் வெளியே கூற வெட்கப்படச் செய்த காட்சி; தேசியப் பூதங்கள் பத்திரிகைகள் பெயரால் திரை போட்ட காட்சி — திரையைக் கிழித்தெறிந்து மக்களின் உள்ளங்களில் ஊடுருவிப் பாய்ந்த மாபெரும் காட்சி, மறக்க முடியாத அந்தநாளில் நடந்தஇன்று, புதுக் கல்வித் திட்டம் புதைகுழி போன பிறகு; வெற்றியாரால் —என்று வினவும் கிளப்பி, மக்கள் சக்தியால்—ஏற்பட விடை- [illegible]

கூட்டம். அது வெற்றியை இரவலுக்கு வாங்கி விழா கொண்டாடும் வீணர்கள் கூட்டம் என்பதை மக்கள்சொல்லிச் சொல்லி சிரிக்கிறார்கள்!

பேச்சுக் கச்சேரிக்காரர்கள்—உல்லாசிகள்-பொழுதுபோக்குக்காரர்கள் — நாடகக்காரர்கள் — கூத்தாடிகள் - இளைஞர்களை சினிமாக் கொட்டகை பக்கம் இழுத்துக்கொண்டு போகிறவர்கள் — திராவிடநாடு, ஸ்டுடியோவுக்குள் அல்லவா இருக்கிறது—என்றெல்லாம் தூற்றி, அந்த தூற்றலிலே தளிர்விட்டு விடமாட்டோமா என்று நினைத்து, காலமெல்லாம் வசை பாடிக் கழித்த கூட்டத்துக்கு—கல்லக்குடி. ஒரு பேரிடி, கருணாநிதி தலைமையில் கல்லக்குடிப்போர் - அவர் வாலிபர்களை சினிமாக் கொட்டகை பக்கம் இழுத்துக்கொண்டுபோகவில்லை, களத்துக்குஅழைத்துக்கொண்டு போய்விட்டார்! களம்-பத்திரிகைக் கலமல்ல, பேனாவிலே விளையாடிவிட்டு மாதம் முடிந்தவுடன் சம்பளத்தை எண்ணி வாங்க!

போர்க்களம்-அங்கே துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தன—தடிகள் மண்டையைப் பிளந்தன. கை ஒடிந்தவர்கள் — கால் ஒடிந்தவர்கள் உண்டு. கைது —வழக்கு உண்டு. "கோர்ட்டு முடியும் வரை தண்டனை"யை வாங்கிக் கொண்டு நானுந்தான் போருக்குப் போனேன், தியாகத் தழும்பு ஏறி விட்டது என்று கூறும் வழக்கல்ல! ஆறுமாதக் கடுங்காவல்— கருணாநிதிக்கு. உல்லாச புரிக்கு போகவில்லை — ஜெயிலுக்குள் போனார்! நீளப் பட்டியல்; எழுத எழுத நீளும். கருணாநிதி மட்டுமா, கண்ணதாசன், சத்தி, ராமசுப்பையா, இன்னும் உண்டு, ஆண்டுக் கணக்கில் மாதக் கணக்கில் தண்டனைபெற்றவர்கள்! அவர்கள் "திராவிட நாட்டை" ஸ்டுடியோவுக்குள் காட்டவில்லைசிறைகுள்ளே காட்டியிருக்கிறார்கள்.



கல்லக்குடி சோறு தருமா ?—கேட்டவர்கள் உண்டு! சோறு தராது — மானம் தரும் என்று பதில் கிடைத்திருக்கிறது. சோறு பெரிதா? மதியுள்ளவர்களுக்கு தீர்ப்பை விட்டாகி விட்டது.

பெரிய மனிதர் சொன்ன சின்னச்சொல், "நான்சென்ஸ்". அந்த தீச்சொல்லை தாங்காத தீரர்களின் போர் ரயில்நிறுத்தப் போராட்டம்! தமிழன் வீரன்—தமிழன் பெருமை - தமிழச்சி கண்ணகியின் புகழ்-தமிழனின் சொத்து சிலம்புச் செல்வம்-என்றெல்லாம்பேசியே தலைவர்களாகி விட்டவர்களுக்கு பண்டிதரின் பதட்டப் பேச்சால் சொரணை பிறக்கவில்லை, சூடு உண்டாகவில்லை. தலையைக் கொடுக்க வேண்டியவர்களெல்லாம் தலைமறைவாய்ப் போய்விட்டார்கள்! நேருவின் மீது நேரடி நடவடிக்கை எடுத்துக் கொண்டவர்கள் தி மு. கழகத்தார்தான். ஒரே நாளில், அந்த ஜூலை 15ல் ஆறு பேரை பலி கொடுத்து ஆறுயிரத்துக்கு மேற்பட்டவரை சிறைக்குள்ளேதள்ளியிருக்கிறது அந்த போராட்டம்.

திராவிட இயக்க வரலாற்றிலே முதல் தடவையாக ஒரு "சதி வழக்கை" உண்டாக்கி யிருக்கிறது அந்த போராட்டம். தூத்துக்குடி தோழர்களை 10 மாதம் 17 நாட்கள் விசாரணைக் கைதிகளாகவே, சிறைக்குள் வைத்து வஞ்சம் தீர்த்துக் கொள்ள, சர்க்காருக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கிறது அந்த போராட்டம். தூத்துக்குடியிலேகிளம்பிய வேட்டுச் சத்தம் அமெரிக்க "நியூயார்க் டைம்ஸி"ல் எதிரொலித்திருக்கிறது. ஜூலை15—லண்டன் "ரவுண்ட் டேபில்"பத்திரிகையில் இடம் பெற்றிருக்கிறது. உலகத்தின் கவனத்தையேதன்பக்கம் இழுத்த மாபெரும் நாள்—அந்த ஜூலை 15 ரயில் நிறுத்தப்போராட்டம்.

அதோ, மந்திரம், உச்சமாகாளி சீனிவாசன்- கணபதி – நடராசன் கேசவன்கள் கல்லறையிலிருந்து க..வென ஒலிகேட்கிறது. அவா.. பேசும் பிணங்கள். திராவிடத்தின்தியாகச்சின்னங்கள், தாயகம் மறவாத தங்க ஒளிவிளக்குகள், ஆச்சாரியார் மூலம் நேருவுக்கு அர்ப்பணித்த ஆறு உயிர்கள்! அவர்கள் பேசட்டும், அதை அகில உலகமும் கேட்கட்டும். "தி. மு. கழகம் தேச விரோத தீயசக்தியா? கொள்கையும்லட்சியமுமில்லாத கூட்டமா? சுயநலத்துக்காக கடை விரித்திருக்கும் கட்சி வியாபாரமா?"—தேசியத் திருவாளர்களே, உங்களைத்தான் கேட்கிறார்கள் அந்தஆறுபேரும். ஜீரணமாகாத நேரத்தில் சிறிது பேசிவிட்டு, ஓய்ந்த நேரத்தில் உல்லாசமாக ஒதுங்குவதற்கு பயன்படும் இயக்கமல்ல தி. மு. க. அடிவயிற்றிலிருந்து கிளம்பும் உரிமைக்குரலை, செத்தாவது செயலாக்கிக் காட்ட வேண்டுமென்று கூடி நிற்கும் தீரர்கள் கூட்டம் தி. மு. க. அதைத்தான் நிரூபித்துக் காட்டியிருக்கிறது அந்த ஜூலை 15.

★

### மக்கள் மன்றத்தில் மமதையாளர்கள் ?


○

"முன்பு, 'டயர் சுட்டான், சுட்டான்—துப்பாக்கியில் குண்டுகளிருக்கும் வரை சுட்டான்! 'என்ன கொடுமை!'என்றுஎடுத்துப் பேசிவந்த காங்கிரஸ்காரர்கள், பழுப்பு நிற டயர்களாக அல்லவா காட்சி தருகிறார்கள்!

டயராவது, 'புரட்சி மூண்டுவிட்டது' என்று சாக்குக் கூறிக்கொண்டு சுட்டான்; இவர்கள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவனை எல்லாம் அல்லவா சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள்! இவற்றிற் கெல்லாம் காரணமானவர்களை நாம் விட்டுவிடப் போவதில்லை; ஒருகாலம் வரும்—அந்தத் திராவிடரின் ஆட்சிக் காலத்திலே, அவர்களை கூண்டிலேற்றத்தான் போகிறோம்; கூண்டில் என்றால் குற்றவாளிக் கூண்டில் அல்ல; மக்கள் மன்றத்தின் முன் நிறுத்தத்தான்போகிறோம்; மக்கள் அவர்களுக்குத் தர வேண்டிய நியாயமான தண்டனையைத் தருவதற்காக! அதற்கு முன் அவர்கள், தங்கள் செய்கைகளை உணர்ந்து சரியானகழுவாய் தேடிக் கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கிறேன்; இன்றேல், இன்னமும் மமதையோடிருந்தால் மக்கள் மன்றம் அவர்களைச் சும்மா விடாது."

—அண்ணா

# ★ அவரது அஸ்தமனம் ★




## குற்றப் பரம்பரை

மக்களின் பிரதிநிதிகளைக் கேட்டு அரசாங்கத்தை நடத்து மாறு 16—ம் லூயியை கேட்டுக் கொண்டபோது அவன் சொன்னான்—" அரசாங்கமா ? அது நான் தானே!"

மக்களின் பிரதிகளைக் கேட்டு கல்வி திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரச்சொன்னபோது ஆச்சாரியார் சொன்னது "புத்தர் யாரைக் கேட்டுக் கொண்டு உபதேசம் செய்தார்? நான் யாரைக் கேட்டு செய்ய வேண்டும்?"

பிரான்சு நாட்டு 16—ம் லூயி மக்கள் 'சக்திக்கு' தலைவணங்கினானில்லை; எனவேதான் அந்த [illegible]ளக்காரனின் தலை 'கில்லெட்டின்'னால் கிள்ளி எறியப்பட்டது.

அந்தக் கொற்றவன் துவக்கிவைத்த 'குற்றபரம்பரை'யின் வாரிசாக இருக்கும் ஆச்சாரியாரும் [illegible]



எரிமலை ஆகிவிட்டதப்பா என் நெஞ்சம் தாங்க முடியவில்லை இந்த வேதனையை என்னால்! தாய்க்குப் பிள்ளையில்லையென்கிருர்கள். எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும்; அந்தப் பிள்ளையையாவது ஒழுங்காக வளர்க்கிருர்களா என்ருல், அதுவுமில்லை: அதை சித்ரவதை செய்து சிரழிக்கிருர்கள். எப்படியப்பா சுமக்க முடியும் இந்த சோகச் சுமையை! சொல் சுந்தர்; நீயே சொல்! சுவையான செய்திகளையே உன்னோடு தினம் தினம் பேசியிருக்கிறேன்; இன்று உன்னையும் அழவைக்கும் செய்தியைப்பேசுகிறேனேயென்று என் மீது வருத்தப்படாதே—சகோதரா! சகிக்க முடியவில்லையடா இந்தக் கொடுமையை! என் இருதயச் சுமையை உன் கனிவான மொழியொன்றினுல் மட்டுமே குறைக்கமுடியுமென்று எனக்குத் தெரியும்—ஆனுலும் இந்த நிகழ்ச்சியைப் பொருத்தவரை நீயும் தோற்று விடுவாய்! அப்படி நொந்து போயிருக்கிறேன் நான்.''

"அன்பா! அழாமல் பேசு—முதலில் விஷயத்தைச் சொல்! அப்படியென்ன வாராதது வந்துவிட்டது?''

"வாராதது வந்துவிடவில்லை—வழக்கமாக வஞ்சகர்கள் செய்யும் வேலைதான் இது! ஆனுல் இது, இதுவரை நடக்காத இடத்திலே நடந்து விட்டது!''

"மாமனுர் வீட்டிலா?''

"குடும்ப விஷயமில்லை சுந்தர் நான் பேசுவது! கொந்தளித்துக் குமுறிவிட்ட கோர நிகழ்ச்சியடா இது!''

"பிறகு யாராவது நண்பர்களிடம்?''

"நண்பர்களா? சகோதரா!—நண்பர்களைப் பற்றித்தான்நாமிருவரும் ஒரு நல்ல முடிவுக்குவந்து பல நாளாகிறதே!—நாசம் நடந்துவிட்டது — நடக்காத இடத்திலே நடர்துவிட்டது!''

"புரியும்படி சொல்—என்னையும் குழப்பாதே!''

"திருடி விட்டார்கள்!''

"எதை? பணத்தையா?''

"பணம் போனுல் என்ன—அதைப் பற்றி நான் என்றைக்கடா இப்படி கவலைப் பட்டிருக்கிறேன்?''

"பிறகென்ன; குழந்தையின் முத்தாரமா?''

"அது அந்த திருடனுக்குத் தேவையில்லை போலும்!''

"பிறகு எதைத்தான் திருடினுன்? யார் அந்தத் திருடன்—அதைச் சொல்!''

"திருடன் பெயரைச் சொன்னுல் நீ நம்ப மாட்டாய்—நானும் நம்பவில்லை முதலில்! இப்போது தானப்பா உள்ளம் கொதிக்கிறது! மகனைப் பறிகொடுத்த தாயின் வயிறுகூட இப்படி எரியாதப்பா!''

"சரிதான்—ரத்தக் கண்ணீரே விட ஆரம்பித்து விட்டாய்!''



"அது தானப்பா என்கதை!-கண்ணீர்க்குளமாகத்தான் மாறி விட்டது என் வாழ்க்கை!''

"நீ இப்போது சொல்லப் போகிருயா இல்லையா? கடைசியாகக் கேட்கிறேன், விபரத்தைச் சொல்!''

"என் எழுத்தைத் திருடிவிட்டார்கள்!''

"என்ன?''

"யசோதரா காவியத்தைத் தழுவி ஒரு கற்பனைச் சித்திரம் வரைந்திருந்தேனே தெரியுமா உனக்கு?''

"ஆமாம், சொன்னுய்! நான் படித்துப் பார்க்கவில்லை-அந்தக் கற்பனைக்குத் தலைப்புகூட "சுகம் எங்கே?" என்று அமைத்திருந்தாய் அல்லவா!''

"அதுதான் சகோதரா! சூதர்களால் களவாடப்பட்டுவிட்டது!

"தலைப்புதானே!''

"அல்ல! அல்ல! தலைப்பைப் பற்றியல்ல நான் பேசுவது! கருத்துக்களும் உரையாடல்களும் களவாடப்பட்டுவிட்டன பாவிகளால்!''

"பதருதே!''

"நான் என்றைக்காவது இப்படிப் பதறிப் பார்த்திருக்கிருயா? என் அன்பு உருவான தந்தையின் பிணத்தைப் பார்த்தபோதுகூட மரம் போலத்தானே நின்றேன்—அழுதேனு? பதறினேனு? சுந்தர்! உனக்குத்தான் தெரியுமே; என் இதயராணி-இல்லறத்தின் விளக்கு இமைகளைத் திறக்காமல் மூடி—இறப்புலகம் ஏகிவிட்ட நேரத்தில் கூட வாய்விட்டுக் கதறவில்லை நான்! அமைதியாகத்தான் நின்றேன் -- பட்டமரம் போல் ஆனேனே தவிர பதறவில்லையே சகோதரா!



அப்பா! அப்பா! என அழைத்துத்தாவிய என்செல்வன் செத்து விட்டபோதும்கண்ணீர் உகுத்திடவில்லை—கலங்கினேன் — கதறிடவில்லை! அதுவும் தெரியும் உனக்கு! அருமைச் சகோதரனே! இப்போது நான் பதறுகிறேன் — துடிக்கிறேன்! இதை நான் மறைத்திட விரும்பவில்லை! கழுத்திலே

ருந்தால் தலைவேறு முண்டம் வேருகப் போயிருக்கும்! இந்த அரிவாள் இருதயத்தைக் கொந்தி விட்டதடா என் சுந்தர்! அலறுகிறேன் — இந்த உலகத்தின் காதிலே விழட்டும் என்ற நினைப்பிலே கூவுகிறேன் — கூச்சலிடுகிறேன்! — கூடாது! கோழைபோல் அழக்கூடாது, என்று நீ கூறுகிருயா?—என் ஒருவனின் கண்ணீர் அந்தப் பாதகர்களின் பாராங்கல் மனத்தைக் கரைத்துப் பண்படுத்திவிடும் என்பதால் அல்ல நான் அழுவது! பழம் கிடைக்கும் அழுதால் என்று குழந்தை நினைக்கிறதே அது போலவோ; பலன் கிடைக்கும் அழுதால் என்று பாசாங்குக்காரி நினைப்பாளே—அது போலவோ அல்ல நான் அழுவது! மண்டையைப் பிளந்தால் ரத்தம் தானே கொட்டுகிறது—அது போலத் தான் கண்ணீரும் கொட்டுகிறது. என் கண்ணீருக்கு சக்தியிருக்கிறதோ இல்லையோ—அதைப்பற்றி ஆராய்ச்சி எனக்குத் தேவையில்லை—நான் அழுகிறேன்-இல்லை-அழும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு விட்டேன்!''

"மிகவும் புண்பட்டிருக்கிருய்-கொஞ்சம் நிம்மதியாக—மௌனமாக இரு!''

"முடியாது சுந்தர்! என் இருதய பாரம் குறைய வேண்டும்—ஏதாவது பேசிக் கொண்டேயிருக்கிறேன்—பித்தன் என்று கூறுவாய்! கூறிக்கொள்! கவலையில்லை!''

"நானும் சேர்ந்து உன்னோடு அழுகிறேன் —விஷயத்தையாவது புரியும்படி சொல்!''

"அது தான் சொன்னேனே; யசோதரா காவியத்தைத் தழுவி "சுகம் எங்கே?" என்று ஒரு கற்பனைக் காவியம் தீட்டினேன். அதிலே உள்ள என் உரை நடைகளை தீவட்டிக் கொள்ளை அடித்து விட்டார்கள் தீயவர்கள்!''

"அந்தத் தீயவர்கள் தான் யார் என்று கேட்கிறேன் — அதைச் சொல்லு முதலில்!''


"யசோதரா காவியத்தில்வரும் அமிர்தமதி என்ற அரசியை விடக் கொடியவர்களப்பா அந்த திருடர்கள்!''

"அமிர்தமதி! யசோதரா காவியம்! நான் எதுவுமே படித்ததில்லை-நீ என்னிடம் வந்து உதாரணம் காட்டுகிருய்!''


"யசோதரா காவியம் — நீ படித்ததில்லை? ஐஞ்சிறுங்காப்பிய வரிசையிலே உள்ள தல்லவா அந்தக் காவியம்! அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக்கூறும் சமண சமய நூல்! சுந்தர்;அதிலே வரும் அமிர்தமதி என்ற பாத்திரத்திற்கும் என் எழுத்தைத் திருடிய எத்தர்களுக்கும் கொஞ்சமும் வித்தியாசமில்லை! சுருங்கச் சொல்லப் போனுல் - இந்த சம்பவத்துக்கும் யசோதரா காவியத்திற்கும் நிரம்பத் தொடர்பு உண்டு!''

"சரி! அதையாவது புரியும்படி சொல்லு!''

"யசோதரன் அவந்தி நாட்டு மன்னன். அவனது பட்டத்து



...டும் காவியத்தைத்
...டரத் தூண்டினன்)
...கி அமிர்தமதியும்,
...யசோதரனும் ஒரு நாள்
...ரத்தில் இன்ப கேளி
...டுபட்டனர்.''
...ஒய்யாரமானகட்டமே
...து தான் ஆரம்பம்
—சொல்லு சோதரா,
...!''
...ற் காவியம் எழுதி
...ர்-கண் அயர்ந்தனர்.''
...ான்,சுருக்கமாகமுடித்து
...—பிறகு — காலையில்
...ர்! அவ்வளவு தானே!''
...லே-இல்லே-அரசன் தூங்
...பம், ராணி கண்விழித்



...ட்ட ...வள் ...பின்

எழுப்பியவனை கட்டித் தழுவ வேண்டுமென்று துடித்தாள்!''

''அய்யய்யோ!—அப்புறம்!''

''மறுநாள் தன் தோழி குணவதியை அனுப்பினாள்; அர்த்த ராத்திரியிலே பாடியவன் யாரென்று அறிந்துவர! தோழியும்போய் அவனைக் கண்டாள். இசை எழுப்பியவன் ஒருயானைப் பாகன். அவன் எப்படிப் பட்ட அழகுடையவன் தெரியுமா? தோழி வாயிலாக கவிஞர் கூறுகிறார் கேள்!

''நரம்புகள்விசித்த மெய்யன், நடையினிற் கழுதணிந்தோன், திரங்கியவிரலன், கையன், சிறுமுகன், சினவன், சீறிற் குரங்கினைய னையன், கூனன்,குழிந்து புக்கழிந்த கண்ணன்''

இன்னும் பலவாறாக அவனது விகாரங்களை வர்ணித்து அவன் மீது ஆசைவைப்பது தகாது என்று ராணியிடம் தோழி கூறுகிறாள்—அமிர்தமதியோ-''அவன் எப்படியிருந்தாலும் கவலையில்லை. அவனை அணைத்து மகிழத்தான் வேண்டும்'' என்று பறக்கிறாள். கனியிருப்பக் காய் பறிக்கலாமா அம்மா! சகல அழகும் பொருந்திய அரசர் பெருந்தகையின் மனைவியாகிய நீங்கள், கேவலம் குரங்கைப் போன்ற—ஒரு சாக்கடை மனிதனை கொஞ்சிக்குலாவ விரும்பலாமா தாயே! என்றெல்லாம் குணவதி தடுக்கிறாள். ஆனால் அரசியோ, அவன் எப்படியிருந்தால் எனக்கென்ன; அவன் நல்ல இசைவாணன்—அவன் அணைப்பிலே தான் சுகம் இருப்பதாக நான் உணருகிறேன் என்று கூறியதோடு, அந்தப் பாடல் கற்ற யானைப் பாகனையும் வலிய இழுத்து, அணைத்து மகிழ்ந்தாள். நாளொரு மேனியாக அந்த நாய்க் காதல் வளர ஆரம்பித்தது. ஒரு நாள் அரசனே அவர்களது காதல் களியாட்டத்தைத் தூர நின்று பார்த்துவிட்டான். அப்போது என்ன நடந்தது தெரியுமா? அரசன் எந்தக் காட்சியைக் கண்டான் தெரியுமா? வழக்கமாக யானைப் பாகனை சந்திக்கும் அமிர்தமதி அன்று சற்றுத் தாமதமாக அவனிடம் வந்து விட்டாளாம். அதற்காக அர்... ...யானைப் பாகன்—அட்ட...
...ன்னும் பெயருடைய
...லக்ஷணம், அமிர்த
...துக் கருங் கூந்தலை
...து எறிந்து, அவ
...ி, இரு கைகளா
...த்து ஏன்
...நி வந்தாய்
...பக் கேட்

...காதம்—
...ம் ஓடி
...ாள்ர்
...லாதி
...கிய
...கன்
...லே

கொண்டு காலந் தாழ்ந்தமைக்கு மன்னிப்பு கோருகிறாள். இதைக் கண்ட மன்னன் வெகுண்டான். தனக்குத் தடையாக வந்த மன்னனுக்குத் தந்திரமாக நஞ்சு கலந்து அவனையே தீர்த்துக் கட்டிவிட்டாள், அந்த பாகனின் பாட்டிலே சுகம் கண்ட பாதகி. அந்தப் பாதகிக்குப் பெயர் அமிர்தமதி! இதுதான் சுந்தர், யசோதாகாவியத்தின் சுருக்கம்!''

''நன்றாயிருக்கிறது — சந்தனத்தை மறுத்து சாக்கடையிலே சுகங்கண்ட ராணியின் கதை நன்றாயிருக்கிறது! இந்தக் காவியத்துக்கு நீ ''சுகம் எங்கே'' என்று பெயர்வைத்தது மிகவும் பொருத்தம்''

''இப்போது புரிகிறதா—என் எழுத்தைத் திருடியவரும் அந்த



அமிர்தமதியும் குணத்தால் ஒருவரே என்பது! கேள் சுந்தரம்! பேச்சை மாற்ற வேறு பக்கம் திரும்பாதே! காவியத்தில் வரும் அமிர்தமதி—அரசனை விட்டு யானைப் பாகனைத் தேடுகிறாள்— அந்த விகாரியுடன் விபச்சாரமும்நடத்துகிறாள். நல்லதுகசக்கிறதுநாசம்இனிக்கிறது அவளுக்கு! அவளைப் போலத் தான் என் எழுத்தைத் திருடியவருக்கும் தேன் கசக்கிறது!—ஆமாம் சகோதரா! திருட்டுத்தனம் இனிக்கிறதாம் — யானைப் பாகனிடம் போன அமிர்தமதியாகிவிட்டார் அந்தப் பெரிய மனிதர்!—அமிர்தமதி மாளிகையின் ராணி,மண்டலத்து அரசி. அவள் மாவுத்தனின் சரசியாக விரும்புகிறாள். என் எழுத்தைக் கொள்ளையிட்டவர்களும் அப்படித்தான் சுந்தர்! அமிர்தமதி கற்போடு வாழ எண்ணவில்லை! இந்த முதலுக்கு அதிபதியும் நாணயத்தோடு வாழ எண்ணவில்லை! அவள் யானையின் நிழலிலே உறங்குகிறவனைக் காதலித்தாள்! இவரோ ''ஏமாற்றும் தொழிலை'' விரும்பி ஏற்றுவிட்டார்!''

''யார் என்றுதான் சொல்லேன்!''

''சொன்னால் நம்பமாட்டாய்! அவ்வளவு நல்லவராயிருந்தார்—



யாரோ அவரை விஷமாக்கி விட்டார்கள். கண்ணியம் வாய்ந்த அவரது ஸ்தாபனத்தையும் கருடன் பதிப்பகமாக ஆக்கிவிட்டார்கள். அய்யோ அவர்கள் வாழ மாட்டார்கள்! மூளையை உருக்கி செய்த கற்பனைகளை உழைக்காமல் எடுத்து விழுங்கிவிட்ட எத்தர்கள் அதிக நாள் வாழ மாட்டார்கள்! வியர்வை சொட்டச் சொட்ட, விலாவிலே வலி கொட்டக் கொட்ட, விழி மூடாமல் வேலை செய்து நான் உருவாக்கிய தழுவல் இலக்கியத்தை பாடுபடாமல் எடுத்து, வாயிலே போட்டுக் கொண்டவர்களுக்கு நல்லதொரு தீர்ப்பு கிடைக்காமல் போகாது!''

''உஸ்! பேசாமலிரு! அலட்டிக் கொள்ளாதே!''

''என் நிலைமையிலே நீ இல்லை-அதனால் அப்படிச் சொல்கிறாயா?''

''நானும் நீயும் ஒன்றுதானே-வேறு வேறா?''


''அப்படியானால் இதற்கு என்ன தான் வழி? அதையாவது சொல்! — இந்த அக்ரமத்துக்கு அழிவே கிடையாதா?

''ஏன் கிடையாது! நீ சொன்னாயே கதை — அதிலே இருக்கிறதே முடிவு! அமிர்தமதி தன் சுகம் எங்கே யென்று தேடிக் கொண்டாள்—கணவனையும் கொன்றாள்—ஆனால் அந்த அற்ப புத்திக்காரி காவியத்திலே களங்கம்நிறை அவமானச் சின்னமாக ஆகிவிட்டாளே — அதை அந்தக் கைகாரியால் மாற்ற முடிந்ததா? அதேபோல் உன் எழுத்தை திருடியவர்களும் அவமானத் தோட்டத்திலே பூத்துவிட்ட எருக்கம் பூவாகி விடுவார்கள் பயப்படாதே!''

''சுந்தர்! நீதான் எனக்கு ஆறுதல்!''

''கவலைப்படாதே! அந்த எழுத்துக் கொள்ளையர் யார்? அதைச் சொல்லு!''

''பிறகு சொல்லுகிறேன் — இப்போது என்னால் பேச முடியவில்லை!''



Best copy available




கோர்ட்டில் ஒரே பரபரப்பு! ஒரு பக்கத்தில் பழைய கேடிகள் உல்லாசமாக பேசிக் கொண்டிருந்தார்கள். மதுவிலக்கு குற்றவாளிகளும் அங்கே இருந்தார்கள்; மற்ற கைதிகளும்போலீஸார் தயவில் வீற்றிருந்தார்கள். ஆனால், ஒரு இளம் பெண், கையில் ஒரு குழந்தையுடன் போலீஸ் பாராவில் வந்தபோதுதான், பரபரப்பு ஏற்பட்டது. நல்ல அழகி, வறுமையின் கோரலாலும் அவள் வனப்பையோ, இளமையின் பூரிப்பையோ ஒன்றும் செய்ய முடியவில்லை. நீதிபதி இன்னும் கோர்ட்டுக்குவரவில்லை. வக்கீல்களும், போலீஸ் அதிகாரிகளும், சாட்சியம் சொல்ல வந்த சத்புத்திரர்களும், வேடிக்கை பார்க்க வந்தவர்களும், கோர்ட்டு நிறைய குழுமியிருந்தார்கள்.

மணி சரியாக பதினொன்று; நீதிபதி வழக்கமான கம்பீரத்துடன் வந்து ஆசனத்தில்அமர்ந்தார். முதலில் சில அலுவல்கள் முடிந்தன. பிறகு கோர்ட்டு சேவகன் 'கண்மணி, கண்மணி,' என்று கூப்பிட்டான். கையில் சிறு குழந்தையுடன், திகில் நிறைந்த பார்வையுடன் நின்று கொண்டு எல்லோர் கவனத்தையும் இழுத்துக் கொண்டிருந்த அந்தப் பெண், போலீஸார் பக்கத்தில் வர, குற்றவாளி கூண்டில் ஏறினாள்.

சர்க்கார் தரப்பு வக்கீல் முதலில் நீதிபதியிடம் ஏதோ சில வற்றை சொன்னார்; கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் கண்மணி என்ற பெண்; சில நாட்களுக்கு முன்பு. பெரிய கோவிலருகே, குமாரசாமி என்ற உயர் குடிமகனை வலிய சென்றுவிபச்சாரத்துக் கழைத்தாள்; அந்தக் குற்றத்திற்காக கூண்டிலேற்றப்பட்டுள்ளாள் என்ற விவரத்தை சாகஸமான முறையில் சரளமான நடையில் வெளுத்துக் கட்டினார். அந்தப் பேதைக்கு வாதாட வக்கீல் யாருமில்லை. கோர்ட்டை ஒரு முறை பரிதாபமாக கண்ணோட்டம் செலுத்திவிட்டு, கீழே குனிந்து கொண்டாள்; குழந்தையோ பொக்கை வாய்ச் சிரிப்பை சிந்தி எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது.

"குமாரசாமி" என்று மும்முறை கோர்ட் சேவகன் கத்திய பிறகு, சிவப்பேறிய கண்களும், கிருதா மீசையும், ரவுடி ஸ்டைலும் கொண்ட ஒரு ஆசாமி, அசாதாரணமானதொரு பார்வையை வீசிவிட்டு அலட்சியமாக சாட்சிக் கூண்டிலேறி சத்யப்பிரமாண மெடுத்துக்கொண்டு பின் வருமாறு கூறினான்.

குமா:—'நான் குடியிருப்பது மேட்டுத் தெரு; அங்கே பல வீடுகள் எங்களுக்குச் சொந்தம். என்தகப்பனார் காலத்தில் நான் தினசரி பெரிய கோவிலுக்கு சுவாமி தரிசனத்துக்குப் போவது வழக்கம். இதோ நிற்கிறாளே, இந்தப் பெண் எனக்கு முன் பின் தெரியாது. குற்றம் நடந்த அன்று நான் வழக்கம் போல்கோவிலுக்குப்போனேன். ஆச்சாரப்பன் தெரு ஆத்திமுத்துவும் அங்கே வந்திருந்தார் இன்னும் பல பேர் வந்தனர். கோவில் ஓரமாக சுவரருகில் நின்று கொண்டிருந்த இந்தப் பெண், என்னைவிபச்சாரத்துக்கு அழைத்தாள். எனக்கு அவமானம் தாங்க முடியவில்லை; கண்டபடி ஏசினேன், கைபிடிக்க வந்தாள். ஆத்திமுத்துவும்அங்கே வந்தார். போலீஸ்காரரும் வந்தார். நல்ல காலமாக விஷயத்தை விளக்கி, போலீஸ்காரரிடம் இவளை ஒப்படைத்தோம்; பிறகு போலீஸ்காரர் அவளைப்போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

குற்றவாளி கூண்டிலேயிருந்த அந்தப் பெண் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். சாட்சியைக் குறுக்கு விசாரணை செய் என்று நீதிபதி சொன்னதும் "இந்தப் பாவி தலையில் இடிவிழ; அநியாயமாய் சொல்றானே; ஆண்டவன்தான் இவனை விசாரணை செய்வார்" என்று சொன்னாள்.

பிறகு, ஆத்திமுத்து, அவனை அடுத்து இன்னும் 2 சாட்சிகள், பிறகு போலீஸ்காரர், அத்தனை பேர் சாட்சியமும் சொல்லி முடிந்த பிறகு, நீதிபதி அவளைப் பார்த்து. இத்தனை பேர் சொன்னதைக் கேட்டாயே நீ என்ன சொல்லுகிறாய்என்று கேட்டார்.

கண்மணி தனது வாக்கு மூலத்தைக் கொடுத்தபோது கோர்ட்டில் நிசப்தமாயிருந்தது; அவ்வளவு உருக்கமாயிருந்தது அவள் வரலாறு:

கண்மணி: நான் பிறந்து வளர்ந்தது பூங்குடி; என் பெற்றோர்கள் ஏழை நெசவாளிகள்; எப்படியோ எங்கள் குடும்பம் தட்டுத்தடுமாறி நடந்து வந்தது. ஆனால் என் பருவ வளர்ச்சியோ ஒழுங்காக நடந்து வந்தது. நானும் பருவமடைந்தேன்.



எனக்கொரு அண்ணனுண்டு அவர் குலப் பெருமையைக்காப்பாற்ற குடும்பத் தொழிலை மேற்கொண்டார். ஆனால், திடீரென்று நெசவுத் தொழிலில் அடித்த பெரும் புயலினால், எங்கள் குடும்பம் நடுத்தெருவில் வீசியெறியப்பட்டது. தாய்தந்தையர் எங்களைத் தவிக்க விட்டு கண்ணை மூடினர்.

இந்தப் பொல்லாத உலகில் நானும் என் அண்ணனும் தனித்துவிடப்பட்டோம். எப்படியோ என் அண்ணன் சாமர்த்தியத்தால், பக்கத்துக்கிராமத்தில் எனக்குத் திருமணம் நடைபெற்றது. அவர் ஒரு ஆலைத் தொழிலாளர். நான் என் கணவனோடுவாழ்க்கைநடத்திவந்தேன். என் அண்ணனும் தன் கிராமத்தில் வாழ்ந்து வந்தான். என் குலக்கொடி தழைத்தது. ஆனால் என் தலையில் பேரிடி விழுந்தது போல், என் தங்கக்கட்டி, பிறந்த 6-ம் மாதத்தில் என் கணவன் வாந்திபேதியால்மாண்டுபோனார். நான் விதவையானேன். எனக்கு வேறு போக்கிடமில்லை. கலங்கினேன்; கதறினேன்; கண்ணீர் விட்டேன். கடைசியில் அண்ணனிடமே அடைக்கலம் புகுந்தேன். 18 வயதிலேயே நான் விதவையானது குறித்து என் அண்ணன் துடித்துப் போனார். கொஞ்ச நாள் கிராமத்திலேயே உழன்று கொண்டிருந்தோம். உழைக்க இடமில்லை; வாழ வழியில்லை, என்ற நிலை கிராமத்திலேற்பட்டபோது மூவரும் பக்கத்திலிருந்த நகரமான இந்தப் பொல்லாத ஊருக்கு வந்தோம்.

அன்று மாலை சுமார் மணி 5-இருக்கும். என்னை ஒரு சத்[illegible]தில் வி[illegible] விட்டு [illegible]

யால் துடித்தேன்; என் பாலகனோ புழுவானான். என்ன செய்வது! ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு சற்று கண்ணயர்ந்தேன். யாரோ கூப்பிடுவது கேட்டு கண்விழித்தேன். ஒரு தயிர்க்காரி—அவள் தளுக்குக்காரி என்பது அப்போது தெரியாது—என்னிடம் அன்பொழுகப் பேசினாள்; பரிவு காட்டினாள்; உலகத்தை ஏசினாள் குழந்தையிடம் பாசத்தை வீசினாள். நான் மயங்கிவிட்டேன்; பசிவேறு. என் வரலாற்றைக் கேட்ட அவள் என்னைக் காப்பாற்றுவதாக உறுதி கூறி தன்னோடு அழைத்துச் சென்றாள்.

## முழுப் போராட்டம்

ஜூலை போராட்டத்தில் அய்யம்பேட்டை புகாரி என்பவர் கலந்து கொண்டார். அவர் அப்போதுதான் காங்கிரசிலிருந்து விலகி நமது கழகத்தில் நுழைந்திருக்கிறார். காங்கிரசில் இருந்த அவர் — அங்கே பெற்ற தமிழறிவுக்கு ஒரு உதாரணம் கீழே தரப்படுகிறது.

நான் அவரைப் பார்த்து சிறையில் வகுப்புநேரத்தில் வேடிக்கையாக ஒருகேள்வி கேட்டேன். அறப்போராட்டத்தில் ஐயாயிரம் பேர் சிறை புகுந்தார்கள் என்றால், முழுப்போராட்டத்தில் எவ்வளவு பேர் புகுவார்கள் என்பது தான் அந்தக் கேள்வி. உடனே அந்த புதிய நண்பர் "பத்தாயிரம் பேர்" என்று பட்டென்று பதில் சொன்னார்.

நாங்கள் சென்ற வீடு அவள் வீடு என்று எண்ணி ஏமாந்தேன். அந்த வீடு ஒரு விபச்சாரக்கிடங்கு என்பதைஎன்னால் உடனடியாக உணர முடியவில்லை வீட்டுக்காரி என்னை வெகுவாக உபசரித்தாள். அன்னமிட்டாள்; தைக்குப் பலவகையிலும்

# சுவர் இதோ, சித்திரம் வரைவோம்!

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

நீதிக்கும் நேர்மைக்கும் பரிந்து பேசி போராடப் புறப்பட்டு விட்டாயா?—அது, நீ தவழ்ந்து வளர்ந்த கூடாரத்தின் பயிற்சித் தன்மையைப் பிரதிபலிப்பதாக இருக்கலாம்!

"என் தாய் நாடு என்னிடமிருந்து எதிர்பார்க்கும் பெரும் பணியினைச் செய்கிறேன். என் கடமையை நிறைவேற்றுகிறேன். நான் சாவேன் என்பது எனக்குத் தெரியும். எதிரியின் பெரும் படை என்னை மிதித்துத் துவைத்துவிடும்என்பதைநன்றாக உணர்கிறேன்...என்றாலும் நான் போரிடுகிறேன். என் மூச்சு நின்று விடலாம்; கை பிடித்த கருவிகள் நழுவிக் கீழே விழலாம்; கால்கள் தள்ளாடலாம்; ஆனாலும் போரிடுவேன்...என் உடல் சாய்ந்த பிறகு, பின் வரிசையிலிருக்கும் எனது தோழர்கள்—என் தாய் நாட்டு மாணிக்கங்கள், என் பாதச் சுவடு பதிந்து போன பள்ளத்திலே தங்களது கால்களைப் புதைத்துக்கொண்டு போராடுவார்கள்...எதிரி பலசாலிதான் ...எங்கள் படை மட்டும் என்ன......"

—போராட்டக்களத்திலே, உன் அடிவயிற்றிலிருந்து இப்படி சில வாசகங்கள் பீறிட்டு வெளிவந்தால், அது உன் உள்ளச்உறுதியை எடுத்துக் காட்டுவதாக இருக்கலாம்!

எதிரியின்கூர்மையான—ஆனால் முனை மழுங்கிப்போன கொலைக் கருவிகள் உன் உடலின் ரத்த நாளங்களை பிய்த்தெறிந்து அணு அணுவாகச் சிதைத்துத் தள்ளும் நேரத்திலும், உனது ஒளி பொருந்திய முகத்தில் மின்னித் தெறிக்கும் குமிழ்ச் சிரிப்பு, ... வெளிப்

## அன்பழைப்பு வரும்

"எதிர்காலத்திலே நாம் பலப்பல போராட்டங்களை நமது லட்சியமான திராவிடநாடு திராவிடருக்காகும் வரையில் — நடத்தத்தான் போகிறோம். அதற்கு உங்களை நீங்களே இப்பொழுதிருந்தே தயார் செய்து கொள்ளவேண்டும். நான் எண்ணியுள்ளபடி காரியங்கள் தொடர்ந்து நடைபெறுமானால்இன்னும் ஓராண்டிற் குள்ளாகவே நாம் மீண்டும், வடவரை எதிர்த்து மகத்தான போராட்டங்களில் ஈடுபடவிருக்கிறோம்.அப்பொழுது உங்களுக்கெல்லாம் அன்பழைப்பு வரும்போது அதை ஏற்று, களத்திலே காலெடுத்து வைக்க, கணக்கற்ற இளைஞர்கள் வரவேண்டும் என விரும்புகிறேன்."

—அண்ணா

நீ செத்துத் தொலையலாம்—அது நீ எடுத்த சபதத்தை முடிக்க வாழ்வையே பணயம் வைத்துவிளையாடத்தீர்மானித்து விட்டதின் எதிரொலியாக இருக்கலாம்!

ஆனால், இவ்வளவும்நீவளர்ந்த-வாழ்ந்த புறச் சார்புகளைப் பொருத்த விஷயம். சாவதோ, போரிடுவதோ, வீரக்குரல் எழுப்புவதோ உன்னுடைய தனித்துவத்துக்கு — மூளையும் அதில் சிந்திக்கும் தன்மை நிறைந்திருப்பதற்கும் அத்தாட்சிகளாக அமையா!

சாவது, உடலும் உயிரும் சம்பந்தப்பட்டது!

அந்தச் சாவை எப்போது எதிர்கொண்டழைக்க வேண்டும்; உதிரத்தைப் பாய்ச்ச எந்த நேரம் ஏற்றது; எந்த நேரத்திலே பிணமானால், எண்ணியது கை கூடும் என்பவைகளை நிர்ணயித்துப் பார்ப்பதில்தான், உன்னுடைய அறிவுப் பிரகாசம் தெரிய வரும்; செய்ய நினைக்கும்பணிக்கு நீ கொடுக்கும் மரியாதை வெளியாகும்!

இதில்-இந்த நேரத்தை நிர்ணயிக்கும் பெரும்பணியைச் செய்வதில், வழி வழியாக ஒரு விசித்திர நியதி நிலவி வருகிறது; அதாவது சாகத்தெரிந்தவனுக்கு நேரத்தை நிர்ணயிக்கும் பொறுமை இருப்பதில்லை; போராடத் துணிந்தவனுக்கு போகும் வழி எது வென்பது புரிவதில்லை. அதற்கு ஒரு மூளை வேலை செய்தாக வேண்டும்! நேரத்தை நிர்ணயித்துக் கொடுப்பதற்கே ஒரு பண்பட்ட—விழுதுவிட்ட தலைவர் தேவை! சாகத் துணிந்தவர்கள் எங்கும் சாதாரணம்—ஆனால் அந்தச் சாவுகளை வாழ்வுக்கு அச்சாரமாக்கிக் காட்டக் கூடிய தலைவன்கிடைப்பது தான் அரிதினும் அரிது! அத்தகு தலைவர்கள் அடிக்கடி பிறப்பதில்லை;பிறந்துவிட்ட அவர்கள் இறப்



முன்னூறு கோடிக்கும் மேலான மானிடச் சமுதாயத்தில், ஒரு சில மனிதர்களே தலை தூக்கி நிற்க முடிகிறது; என்றும் "சிரஞ்சீவி"களாக இருக்க முடிகிறது!

அதேபோல,...

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கும் கால வெள்ளத்தில், ஒரு சில நாட்களே ஒதுங்கிக் கரை சேருகின்றன!

போராட்டப் பாதை வகுத்துக் கொடுத்த தலைவர்கள் மானிட ஜாதியின் இதயத்திலே தங்கள் பெயர்களின்பேரால் ஆழமான இலச்சினையைப் பொரித்து விடுகிறார்களென்றால், போராட்டம் நடந்த நாட்களும் வழிமுறைகளும், உலகத்தின் முன்னால் பளபளப்பான ராஜ பாட்டையை தெள்ளத் தெளிய செதுக்கி வைத்து விடுகின்றன!

தலைவருக்கிருக்கும் கவுரவம், அவன் படை நடத்திச் சென்ற நாட்களுக்கும் உண்டு! தலைவர்களின் உருவமும் அவர்கள் போதித்துவிட்டுப்போன சொற்களின் ரீங்காரமும்தான் உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, உண்மைப் பாதையில் நடை போட வைக்க முடியும்.

ஆனால், அவன் படை நடத்திச் சென்ற நாட்களோ...... நினைத்துப் பார்த்தாலே தித்திக்கும்; சொல்லக் கேட்டாலே உயிர்த் துடிப்புமாகும்!

ஒவ்வொரு ஆண்டும் ஒளி உமிழ்ந்து உலகத்தைச் சுத்தம் செய்யும் மே மாதம் முதல் நாள்!

கோடானுகோடி பாட்டாளி மக்களுக்கு நரம்பை முறுக்கேற்றிவரும் மே 5-ம் நாள். (மார்க்ஸ் பிறந்த நாள்) ஆண்டாண்டு தோறும் பவனி வந்து, இன்றைய அலங்கோல ...

...தைக்கண்டு நகைப்பொலி முழக்கச்செய்யும்ஆகஸ்டுபதினைந்தாம் நாள்!

தென்னாட்டு மக்களின் உரிமைக் குரலில் இருக்கும் வேகத்தை—தெளிவை வீணர்களும் புரிந்து கொள்ளும் அளவுக்கு விடுதலை நிழல் படிந்து காணும், செப்டம்பர் 17-ம் நாள்!

இவைகளெல்லாம், கடந்து போன காலத்தின் ஒரு சுழற்சிச் சிதறல்கள் தான்!

என்றாலும், அவைகளில் தலைவர்களுக்கும் இல்லாத ஒரு கம்பீரம் இருக்கிறது; சாவுக்குத் தயார் படுத்தும் 'மாயம்' இருக்கிறது; வாழ்வுக்கு வழி தேடும் 'வெளிச்சம்' இருக்கிறது!

ஒரு சமுதாயத்தின் எதிர்கால வாழ்விலே அழியாத இடம் பெற்றுவிட்ட இந்த ஜூலை 15-ம் நாளும் திராவிடத்தின் விடுதலை காவியத்திலேமுதலேட்டில் பொரிக்கும் பெரும் பேறு பெற்றதாகும்!

### ஜூலை 15!

உண்மைத் தியாகிகளை உலகுக்கு அறிமுகம் செய்துவைத்த ஒருசில நாட்களிலே, தன்னையும் ஒன்றெனச் சேர்த்துக் கொண்டு விட்டது!

### ஜூலை 15!

விடுதலைப் போருக்குத் தயார் படுத்தும் தலைவனை — **நமது அண்ணாவை**—வெறும் தலைவனாக மட்டுமல்ல, ஆரம்பத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல், நேரமறிந்து படையின் பயணத்தைத் துவக்கிவைக்கும் பண்பட்ட தளபதியாகவும் உருவகப் படுத்திக் காட்டிவிட்டது!

### ஜூலை 15!

அறிஞர் அண்ணா-நமதுதலைவன் அண்ணா — ஆயிரமாண்டுகட்கு ஒருமுறை பிறக்கும் அறிஞன் மட்டுமல்ல; நாடு எதிர்பார்க்கும் நேரத்தில் தோன்றும் விடுதலை வீரன்மாத்திரமல்ல, நேரமறிந்து பணியாற்றும் தீர்க்கதரிசியுங் கூட என்பதை அகில உலகத்துக்கும் பறைசாற்றி விட்ட பொன்னாள்!

போருக்குத் தயார்படுத்தும் வீரன், போரில்இறங்கும் நாளைக் கணித்துக் கொடுப்பதிலே மாபெரும் தவறுகளிழைத்து, அடிமுதல் நுனிவரையில் அத்தனையையும் பாழாக்கிவிட்ட சேதி, சரித்திரத்தில் ஏராளம்!

1905-ம் ஆண்டு ரஷ்யப் புரட்சி தோற்றுப் போன பிறகு மாவீரன் லெனின் பின்லாந்துக்கு ஓடினான்! புரட்சி தோற்றதற்கு உண்மைக் காரணங்களை ஆராய்ந்தான். அவைகளில், காலமல்லாத காலத்தில் புரட்சி மூண்டதுதான் தலையாய தவறு என்று தெளிந்தான்!

அதற்குப் பிறகு, புரட்சி... தயாராவதற்கு, ... காலம் எது என்பதை ... பயின்றான் ...

# 1917 - 1954...

(5–ம் பக்கத் தொடர்ச்சி)

பகிஷ்கரித்தார். இந் நிகழ்ச்சி நீதிக் கட்சி வரலாற்றிலே-குறிப்பிடத் தக்க வேண்டிய கட்டமாகும்.

1937—38 ம் ஆண்டுகளில் வீரர்களான நடராசன்—தாலமுத்து ஆகிய இரு இளங்காளைகள் தங்களது உயிர் தித்திப்பையும் எண்ணுமல்தாய்மொழிக்காக தங்களையே தியாகம் செய்து கொண்ட சரித்திரத்தில் குறிப்பிடக் கூடிய நிகழ்ச்சியும் அதே போல பெரியார் — அண்ணு உள்ளிட்ட ஏராளமானவர்களும், தாய்மார்கள்—இளந் தளிர்கள் அடக்குமுறை கொடுமைக்கு ஆளாகியதுமானகட்டம் பார்ப்பனரல்லாதார் (திராவிடர்) இயக்கத்திலே ஓர் திருப்புக் கட்டம் ஆகும். தன்மான இயக்கப் பட்டாளம், தியாகத் தாம் பேற்றுக் கொள்ள தன்னைத் தயார் செய்து கொண்ட "ஒத்திகை'யில் இறங்கிற்று. தொடர்ந்து தூயபணியாற்றும் அளவுக்கு அதாவது திராவிடர் இயக்கமாய்வளர்ந்தது. குடந்தை மண்ணிலே குருதி கொட்டும் அளவுக்கு — இயக்கம் காலடி எடுத்து வைத்தது.

1917–ம் ஆண்டில்–அரசியலிலே தலைவிரித்தாடும் பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழிக்க நம் தலைவர்கள் வகுத்த திட்டங்களும் காட்டிய பாதையும் இன்றும் பார்ப்பனீயத்தை மட்டுமல்லாமல் அதற்கு பராக் கொடுத்துக் கொண்டே நம் தாயகத்தைச் சுரண்டும் வட நாட்டு ஆதிக்கத்தை வெளியேற்றும் அளவுக்கு நமது இயக்கம் வளர்ந்து வருகிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் (நீதிக்கட்சி) சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் — இந்த வளர்ச்சியில் அடங்கியுள்ள நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் போது நம்மை விட்டு மறைந்த மாவீரர்கள் எவ்வளவு மகத்தான தொண்டினை செய்திருக்கின்றனர்; இனி நாம் ஆற்ற வேண்டிய கடமையும் எத்தகையதானது என்பதை நமது தோழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்

1917–ம்ஆண்டுஆகஸ்டு–வெள்ளுடை வேந்தர் தியாகராயர் — திராவிட இயக்கத்தின் ஒப்பற்ற தந்தை — தியாகமூர்த்தி—அவர் அன்று, உத்யோகம் — கல்வித் துறைகளில் பார்ப்பனரல்லாதாருக்கு அளிக்கப்படவேண்டிய நியாயமான உரிமைக்குப் போரிட்டார். அதனுல் தான் இன்று அறிஞர் அண்ணுவின் தலைமையிலே வளர்ந்து உத்தியோகம் — கல்வித்துறையிலே நாம் பங்கு கேட்பதா? நம் நாட்டிலே நமக்கு விகிதாச்சாரப் பங்கு அதுவும் மாற்ருனிடம் நாம் கேட்பதா? அவ்வித இழிநிலைக்கு நம்மையும் நமது சூதுக் காரர்களையும் அரசியல் ஆதிக்கக் கும்பலையும் வெளியேற்றுவோம்—நம் நாட்டை [illegible] இன்பத் திராவிடத்தை இனி எவரும் அடிமை கொண்டிருக்க அனுமதியோம், இது உறுதி உறுதி என்ற உரிமைக் கீத மிசைத்து தீவிர தொண்டாற்றும் மகத்தான சக்தியாக வளர்ந்திருக்கிறோம்.

நமது அண்ணு அவர்கள் வேலூர் மாநாட்டிலே எடுத்துக் காட்டியபடி— தி. மு. கழகம் வளர்ந்து வரும் இயக்கம், தொடர்ந்து வளரப் போகும் மகத்தான சக்தி என்பதை நம் மாற்றூர்கள் உணர வேண்டிய அவசியத்தைவிட நாம் உணர வேண்டியது இன்றியமையாததாகும்.

இச் சக்தியினைப் பெற நாமும் நமது தோழர்களும் நம்மை விட்டு மறைந்த இலட்சிய வீரர்களும் எவ்வளவு கொடுமைகளுக்கு—அடக்கு முறைக்கு—ஏசுதலுக்கு ஆளாகியிருக்கிறோம்.

தாலமுத்து நடராசன், ஆசிரியர் வேலாயுதம், நெல்லிக்குப்பம் மஜீத், சென்னை பாண்டியன் லால்குடி நடராசன், மணப்பாறை குமரவேல், மற்றும், மும்முனைப் போராட்டத்திலும் குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்திலும் உயிர் நீத்த வீரர்கள், கைகால் இழந்த தோழர்கள் அடக்குமுறை கொடுமைகளுக்கு ஆளாகி தங்களின் வாழ்வையே சிதைவுறச் செய்து கொண்ட தூய்மை உள்ளம் படைத்த தோழர்கள்—இன்னும் பலர்—ஆக இவ்வளவு செல்வங்களை இழந்தோம்—இழந்தோம்.

அந்த மாபெரும் வீரர்களின் மகத்தான உயிர்கள் விலை மதிக்கவொண்ணுதது — அவ்வுத்தமர்களின் உயிர்களைப் பலியாக்கிக் கொண்டுள்ள ஆதிக்க வெறி நம் தாயகமாம்—திராவிட பூமியிலிருந்து அறவே வெளியேற இறுதிப் போர்—திராவிட நாட்டின் உரிமைப் போர் தொடுப்போம்—வெற்றி பெறுவோம். அரசியல் அரங்கிலே திராவிட நாட்டுத் தூதுவர்கள் இடம் பெறச் செய்வோம். சௌ-என்-லாய் போன்ற மக்கள் தலைவர்கள் டெல்லியிலே தங்கள் திருநோக்குச் செலுத்திவிட்டால் போதுமென்று கருதும் நிலைமாறி சுதந்திர திராவிடத்தின் தோழமையை எதிர்நோக்கி நிற்கும் அளவுக்கு நம் திராவிடத்தின் பெருமையை நிலைநாட்டுவோமாக!

அந்த மகத்தான நமது இலட்சியம் நிறைவேற அறிஞர் அண்ணுவின் தலைமையிலே கட்டுப்பாடு–கண்ணியம்–குடும்ப பாசம் ஆகிய நற்பண்புகளை அஸ்திவாரமாகக் கொண்டு தொடர்ந்துபணியாற்றுவோமாக மாற்ருரும் நம் கொள்கையை ஏற்க—நமது அணிவகுப்பிலே முன் நிற்க வழி காட்டுந்தன்மையிலே நமது எதிர்காலப்பணி சிறப்புடைத்தாய் அமைதல் வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட திட்டங்கள் காட்டும் முறைப்படி மட்டும் நடக்கும் ஸ்தாபனமல்ல. சட்டதிட்டங்களோடு–அதைவிட சக்திவாய்ந்த குடும்பப் பாசத்தோடு வளரும் மகத்தான இயக்கமாகும்.

ஆதலாலேதான் பொருளாதாரத்திலும்–மற்ற வசதிகளிலும் மூழ்கியுள்ள கட்சிகளைவிட நமது இயக்கம் வலுப்பெற்று வளருகிறது. அந்த வளர்ச்சி மேலும் சக்திவாய்ந்ததாக நிலைத்திருக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நமக்குள் தூய்மையான குடும்ப பாசமும், கட்டுக்கோப்பும், கண்ணியமும், கொள்கையில் தளரா உறுதியும் பெருகுதல் வேண்டும்.

இதன் மூலம் நாம், அண்ணு அவர்களின் தலைமைப் பணியைச் சிறப்பிப்பது மட்டுமல்லாமல், 1917—ம் ஆண்டில் நமது இயக்கத் தாய்ச் சங்கத்தைத் தோற்றுவித்த தியாகராயர் டாக்டர் நாயர்—டாக்டர் நடேசனர் போன்ற தலைவர்களின் கொள்கையையும் — நம் சமுதாய விடுதலைக்காக தங்களின் வாழ்வை அர்ப்பணித்த வீரர்களின் தியாகத்தையும்நாம் போற்றியவர்களாவோம். அந்த உயரிய கருத்தைத் தான் சென்ற ஆண்டு தி. மு. கழகம் நடத்திய மும் முனைப் போராட்டமும் நமக்கு நினைவூட்டுகிறது. எனவே நாட்டுப் பிரிவினைப் போராட்டத்திற்கு நம்மைத் தயார் செய்து கொள்ள 1917 — முதல் 1954 — வரை நமது தாய்க் கழகமும் நாமும் நடத்திய போராட்டங்களை முக்கிய சம்பவங்களை நினைவு படுத்திக் கொண்டு தொடர்ந்து இலட்சிய பாதையில் நடை போடுவோமாக.

# கண்ணீர்த்துளி வீண் போகாது !

தாயகத்தின் விடுதலைக்குப் போராடிய தங்கங்கள் புதைந்து கிடக்கும்சமாதியின் நிழலிலே தெளிக்கப்படும் கண்ணீர்த்துளிகள்வீண்போனதில்லை. புனலுக்குப் பிறகு கிளம்பும் கனல், புல்லரின் கோட்டைகோத்தளங்களை புரட்டித் தள்ளிவிடதயங்கியதில்லை — தவறியதில்லை.



இதை இழிதகையோ உணர வேண்டும்—இரும்பு நெஞ்சம் படைத்தவரும் உணர வேண்டும்— வீரனின் சமாதி — விழியிலே நீரூற்று காட்டுவதோடு நின்றுவிடாது! வீணரை முறித்திடவேலும் தங்திடும்!, "பழியுரைத்துக் கிளம்பு" என்ற மொழியும் பகர்ந்திடும்! ஃ

# நன்றி!

[ கருணாநந்தம் ]

★

தாயகத்தை மீட்கவொரு தம்பிமார் பட்டாளம்
ஆயத்த மாகிவிட்ட ஆனந்தச் சேதியினை
நாட்டினர்க்கு நாம்காட்ட நல்வாய்ப்புத் தந்த அந்த
மேட்டுக் குடிமைந்தன்—மேம்பதவி தாங்குவதால்
மேருமலை போன்றவொரு பேருருவாய்த் தன்னை [யெண்ணும்
நேருவுக்கும், நேர்மையற்ற ஆச்சாரியார் தமக்கும்
ஒன்றல்ல, ஆயிரமாய் நன்றி குவித்திடுவோம் —
நன்ருக நாகரிகம் நாமு ணர்ந்த காரணத்தால்!
ஏழாண்டுக் காலம் எதிர்பார்த்தோம், இன்னுமிந்தப்
பாழான தென்னுட்டைப் பண்படுத்தும் திட்டமில்லை!
நீர்த்தேக்கம், ஆலை, நிறைந்த தொழில்வளங்கள்
சேர்த்து வடநாட்டைச் செல்வக்கா டாக்கிவிட்டார்!
வேகமாய் ஓங்கிவரும் ஏகாதி பத்தியத்தின்
தாகம் தணிவிக்கச் சாகசமாய் இந்நாட்டைத்
தம்பிடியில் சிக்கியுள்ள சந்தையாய் மாற்றிவிட்டார்!
நம்பி இனியும் நாம் நாசத்தில் வீழாமல்,
எட்டி உதைத்தந்த எத்தர்களின் கொட்டத்தை
மட்டப் படுத்திநம் கட்டறுத்துக் கொள்ளமிகத்
தக்க தருணமிது, தாய்நாட்டு வீரர்காள்,
இக்கணமே வாரீர், எழுந்து!

# காமராஜர் வெற்றி பெற

கவர்னர் தயவு தேடி, கொல்லைப் புறம் புகாது, நேரடியாக, பொது மக்களின் ஆதரவைப் பெற, தேர்தலில் நிற்க முன் வந்த பண்பு,

ஜாதிச் செல்வாக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணுமல், மக்களின் ஆதரவு தேவை என்ற கொள்கையை மதித்து, தேர்தலில் ஈடுபடும் நேர்மை,

காங்கிரஸ் கட்சியின் சார்பில் பதவி பெற்றுலும், எல்லா கட்சிகளையும் மதித்து, அந்தக் கட்சிகளின் கொள்கைகளையும் திட்டங்களையும் அறிந்து கொள்ள முயற்சித்து, ஆட்சி செலுத்த விரும்பும் போக்கு,

மக்களின் குரலை மதியாமல்' ஆச்சாரியார் புகுத்திய கல்வித் திட்டத்தை ரத்துசெய்த, நெஞ்சு உரம், ஆகியவைகளுக்காக காமராஜர் பாராட்டப் படுகிறுர்.

இது பொதுத் தேர்தல் அல்ல — ஆட்சிமுறை மாறுவதற்கான தேர்தல் அல்ல இது — எனவே, இதிலே பெரிதும், கட்சி வேலைத் திட்டங்களோ கொள்கைகளோ பிரசினைகள் ஆக்கப்படவில்லை.

மேலும், ஜனநாயகத்தை மதிக்க மறுத்து, நாட்டிலே கொடிய அடக்கு முறையை அவிழ்த்துவிட்டு வெறியாட்டமாடிய ஆச்சாரியார், மீண்டும் பதவியில் புக சமயம் பார்த்துக் கொண்டு இருப்பதும், இதனை ஆதரிக்கும் கூட்டத்தார், இந்தத் தேர்தலில் காமராஜரை வீழ்த்த சகல சக்தியும் யுக்தியையும பயன்படுத்திப் பார்க்கத் திட்டமிட்டு இருக்கிறுர்கள் என்பதும், பெரிதும் பேசிக்கொள்ளப் படுவதால், ஆச்சாரியாரின் அந்தரங்க ஆசையில் மண் விழச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மிகப் பெரிய அளவில் இருக்கிறது.

ஆச்சாரியார் ஆட்சியில் இருக்கும் வெறுப்பும், மீண்டும் அவர் ஆட்சிக்கு வந்துவிட இந்தத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்வார்களோ என்ற அச்சமும், திராவிட மக்களுக்கு நிரம்ப இருக்கிறது—அது, காமராஜரை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தையும் ஊட்டியிருக்கிறது.

காமராஜரை எதிர்த்து நிற்பவர், திராவிட நாடு பிரிவினையைப் பலமாகக் கண்டிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியினர்.

திராவிடரின் அடிப்படைக் கொள்கையான 'திராவிட நாடு' பிரச்சினையில், காமராஜரும் —கம்யூனிஸ்டும், ஒரேவிதமான கருத்துக் கொண்டவர்கள். எனவே ரிக்கும் அன்பருக்கு, நமது ஆதரவு, என்றுகூறி, காமராஜருக்கு எதிராக வேலை செய்யும் ஆர்வம் எழக் காரணம் கிடைக்க வில்லை.

சமீபகாலமாகக் கம்யூனிஸ்டுக் கட்சி, தன் பலத்தில் பெரும் பகுதியை திராவிட இயக்கத்தை எதிர்ப்பதிலேயே செலவிட்டு, திராவிட இயக்கத்தின் வெறுப்புக்கு ஆளாகி விட்டது.

இந்நிலையில், காமராஜர் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை உருவாகி விட்டது.

இதிலே, தாங்களும் பங்கு எடுத்துக் கொண்டதாக மெய்ப்பித்துக் கொள்வதாகப் பணம் அவர்களின் கண்ணீரைத் துடைப்பது காமராஜரின் உடனடியான கடமையாகும்.

காமராஜ சர்க்கார், ஏழைக்கு நியாயம் வழங்கும் என்று ஆயிரம் மேடைகளிலே பேசுவதைவிட, இந்த ஒரு செயல் மூலம், திட்டமாக நாடு அறியச் செய்யலாம்.

களம்பூர்த்தோழர்களைவிடுதலை செய்து, வழக்குகளை வாபஸ் பெற்று போலீஸ் கெடுபிடியை நீக்கி வெற்றிக்கு வழி தேடிக் கொள்ளும்படி காமராஜருக்குத் கூறுகிறேம்.

களம்பூர் தோழர்களை விடுதலை செய்து, வழக்குகளை வாபஸ் பெற வேண்டுகிறேம், என்ற தந்திகள் குவியட்டும்.

ஆதரவு திரட்டவரும் அன்பர்களிடமும் களம்பூர் பிரச்னையை விளக்கி காமராஜர் செயல் புரிய வேண்டும் எனக் கூறுங்கள்.

11—7—54 திராவிட நாடு'

## கொடுங்கோலர்கள் முடிவு!

| | |
|---|---|
| நான் கிருஸ்தவர்களை பூண்டோடு ஒழித்துவிட்டால் கிருஸ்தவர்களென்று ஒரு கும்பல் வாழ்ந்ததாகவே சரித்திரம் எழுதுபவர்களுக்கு சான்று கிடைக்காது. | தி. மு. கழகம் மூட்டைப் பூச்சிக்கு சமானம்; நான் நினைத்தால் இவர்களை நசுக்கி விடுவேன்; சரித்திரத்தில் எழுதப்படும் பழங் கதையாக்கி விடுவேன். |
| —கொடுங்கோல்வேந்தன் **நீரோ** | —முப்புரி நூலர் **ஆச்சாரியார்** |

நீரோவின் வாழ்வோ வீணையோடு முடிந்தது. ஆச்சாரியாரோ இப்போதுதான் கம்பராமாயணத்தை கரத்திலேந்தியிருக்கிறுர்!

படைத்தோரும் காமராஜரை ஆதரிக்கின்றனர்.

ஆனல்,காமராஜர்வெற்றிபெறுவது, அவருடைய ஜனநாயகப் பண்பையும், கல்வித் திட்டத்தை ஒழித்த ஆற்றலையும் பாராட்டி, நன்றி காட்டும், ஏழை எளியவர்களின் துணையினுல்தான் என்பதை அவர் அறியவேண்டும்.

எனவே, வெற்றிபெறும் வழி, மேலும் பொதுமக்கள் மனதைக் குளிரச்செய்வதுதான்,என்பதை அறிந்து செயலாற்ற வேண்டும்.

பொதுமக்களின் குறைகள் பலப் பல! எனினும், நீதி, நேர்மை, அன்பு, அறம், மனிதாபிமானம் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டிய, உடனடிப் பிரச்சினையாக, காமராஜர், களம்பூர் விவசாயத் தோழர்களை விடுதலை செய்ய முன்வரவேண்டுகிறேம்.

களம்பூர் தோழர்கள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறுர்கள்.

சிறையும் வழக்கும் அவர்களைத் தாக்குகின்றன.

அவர்கள், விவசாய மக்களின் நல்வாழ்வுக்காகக் கிளர்ச்சி

வடார்க்காடு மாவட்டத் கிளைக்கழகங்கள் அனைத்தும் இந்தக் கருத்தை விளக்கி, காமராஜருக்குத் தந்தி கொடுக்க வேண்டுகிறேத்.

களம்பூர்த் தோழக்களின் களிப்பு வெற்றிக்கு வழி. களம்

## திரும்பிப் ...

4-ம் பக்க தொடர்ச்சி

விட்டது! நமது ஜீவ இலட்சியமாம் — திராவிட நாடு திராவிடருக்கே — என்ற கோரிக்கையை இதயத்திலே தாங்கியவர்கள் தங்களின் இதயக் கருத்தை விரைவிலே நடைமுறை கீதமாக்கித்தான் தீருவர். அந்த நாளும் வெகுதூரமில்லை!

அன்றோர் நாள் நமது பொதுச் செயலாளர் அண்ணு......

......"சர்க்கார் தடை உத்தரவுகளை, உங்கள் வீட்டு ஓடுகளாகக் கருதுங்கள்! அடக்கு முறைகள் எல்லாம், விளையாட்டு 'கருவிகள்! வீட்டுக்கும் சிறைக்கும் வித்தியாசம் தெரியக் கூடாது! ஆம்; அப்பொழுதுதான் இழந்த திராவிடத்தைப் பெற முடியும்! அத்தகைய வீரத்தியாகம் செய்யத் தயாராகுங்கள்! கண்ணீர்த்துளிகளே! நாட்டின் கண்மணிகளே! அந்த காணிக்கையைத் தாருங்கள் எனக்கு......!" என்று முழக்கிய இலட்சிய கீதம் இன்றும் ஒலித்துக் கொண்டேதானிருக்கிறது; இந்தஇலட்சிய கீதத்தைப் பாடிக் கொண்டேதான் அந்த நாளை...... ஜுலை 15-யை தாண்டி வந்து... திரும்பிப் பார்க்கிறேம். நினைவு அலைகளிலே நெஞ்சைப் பதித்து நடந்து கொண்டேயிருக்கிறேம்!



ஆச்சாரியாரின் துரைத்தனத்தில் அடக்கு முறையின் கோரப் பசிக்கு பலியான கல்லக்குடி அறப்போர்க்காளை — மணப்பாறைகுமரவேல். சிறையிலிருந்து விடுதலை பெற்றும் சின்னுட்களுக்கெல்லாம் சிறை தந்த நோய்க்கு இரையானர் இந்த இளவல்.

# போராட்டம்.

கலைவாணர் என், எஸ், கே.

"போராட்டம்' என்ற வார்த்தை கூட ஒரு வகையில் புனிதமானதுதான்! அதாவது, ஒருவருக்குமற்ருெருவர் தரவேண்டிய உரிமைகளைத் தராதிருக்கும்போது நிகழுகிற ஒருநிகழ்ச்சிதான் போராட்டம்!

இத்தகைய ஒரு புனிதப் போராட்டத்தை நமது நாடு சென்ற ஆண்டுதான் காண முடிந்தது. போராட்டம் நடந்து கொண்டிருந்த போது, எதிரிகளும் தம்மை மறந்து போராட்டத்தை ஆதரித்த விந்தையைக் கூட சில இடங்களில் காண முடிந்தது.

உலகில் எத்தனையோ போராட்டங்கள், எங்கெங்கோ இதுவரை நடந்திருந்தாலும் அண்மையில் இங்கு நடந்த இந்தப் போராட்டம் தான், சரித்திரப் புகழ் பெற்று விட்டது!

ஒன்றல்ல, இரண்டல்ல!
மும்முனைப் போராட்டம்!

வந்தவர் போனவர் வாழ்வது தேடும் சந்தையாக நமது செந்தமிழ்நாடு சீரழியக் கூடாது என்பதற்காக ஒரு முனை!

பெரியவர் களுக்கெல்லாம் கொடுமைகள் செய்தது போக, மிஞ்சியிருக்கும் கொடுமைகளை குழந்தைளின் மீது செலுத்திய புதிய கல்வித் திட்டத்தை எதிர்ப்பதற்காக மற்றொரு முனை!!

ஆசிய ஜோதியானலும் சரி, அண்ணல் காந்தியாருக்குப் பாதியானலும் சரி, 'நாகாக்க' என்ற குறளை நடைமுறைக்குக் கொண்டு வரத் தவறினல், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக மூன்ருவது முனை!!

இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்டனர், பலர்!

உயிரையே காணிக்கையாக உதவினர், இன்னும், பலர்!

தூத்துகுடியில் நாசம் நடக்மாட ஆரம்பித்தாள்!

அப்பொழுதும் எதிரிகளிடமிருந்து இரக்க குணத்தைக் கேட்க வில்லை; நமது தலைவரிடமிருந்து, கடமை கண்ணியம் கட்டுப்பாடு' என்ற அறிவுரைகளைக் கேடயமாகப் மூன்று பெற்ருேம்!

தலைவர் தந்த, இந்த மூன்றே மூன்று தமிழ்ச் சொற்கள் கையாண்டதற்கே இத்தனை வெற்றி கண்டிருக்கிருேம் ...... இன்னும் எத்தனையோ காத்திருக்கின்றன!

புத்தகங்களில்தான் புறநானூற்று வீரங்களைக் காண முடிகிறது என்று புறங்கூறியவர்களே நம்மைப் புகழ வருகிருர்கள்!

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'! என்ற அழகுக் கவிதை, அனுபவக் கவிதையாக மாறிவிட்டது!

'உயிர் நீப்பர் மானம்வரின்' என்ற வள்ளுவனை ஆசியஜோதி அறிந்து கொண்டார்!

நம்மைக் கண்டு நாமே பிரமிக்கும் அளவுக்கு — பெருமைப் படும் அளவுக்கு — வளர்ந்து விட்டோம்!

இனியொரு போராட்டத்தை...

நாம் அறிவித்தாலே போதும் நமக்குள்ள உரிமைகள் யாவும் நம்மைத் தானுகவே தேடிவரும் என்ற நிலைமைக்கு வளர்ந்து விட்டோம்!

வாழ்வோம்— பிறரையும் வாழ்த்துவோம் என்ற நல்ல நம்பிக்கையினல் தான், நாம் இன்னும் போராட விருக்கிருேம்!



மாற்று ... பதா: அவ்வித ... ம்மையும் நமது ... தக ... இக்க

## சுவர் இதோ...

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

"தான், தயார் படுத்தி வைத்திருந்த போர்ச் சாதனங்களுடன், தகுதியான நேரத்தையும் சரியாகக் கணித்து இட்லர் போரில் இறங்கியிருந்தால், இன்று உலக முழுமைக்கும் அவனே சர்வாதிகாரி" என்று ராணுவ நிபுணனெருவன் கருத்துத் தெரிவிக்கிருன்.

"நெப்போலியனின் இறக்கு முக வாழ்வு' ரஷ்யாவில் ஏற்பட்ட தோல்வியிலிருந்து தொடங்கியது. அந்தத் தோல்வி ஏற்பட்டதற்குக் காரணம், காலமில்லா காலத்தில் ரஷ்ய மண்ணை மிதித்ததால் வந்த வினை" என்று பிரபல சரித்திராசிரியன் வர்ணிக்கிருன்.

"சர்வ தேச சங்கம் மறைந்து போனது, போர் செய்து ஓய்ந்த களைப்பில்ஏற்படுத்தியதால்தான்' என்கிருன், ஒரு எழுத்தாளன்.

நேரத்தைச் சரிவர கணிக்காததால் ஏற்பட்ட படு தோல்விகள் இன்னும் எத்தனையோ!

லெனின் ஒரு முறை தவறிய, இட்லர் தெரிந்து கொள்ளாத, நெப்போலியன் பயிலாத, சர்வ தேச நிபுணர்களும் சிந்தித்துப் பார்க்காத ஒரு பொன்னன காலவரையை நமக்கு நிர்ணயித்துக் காட்டிய அறிஞர் அண்ணுவின் செயலாற்றலை, வருங்கால சந்ததிகளுக்கு இந்த ஜுலை 15-ம் நாள் கட்டியம் கூறி நிற்கும்!

ஒரு துறைப் போராட்டத்துக்கு நாள் குறிப்பிடுவதே கடினம்; அதிலும் மூன்று துறைகளில் பல்வேறுபட்ட அநுபவம் சேர்ந்து உருவாக்க வேண்டிய மூன்று துறைகளில்—போராட ஒரே சமயத்தில்—அதுவும் ஒரே நாளை குறிப்பிட்டுக் கொடுப்பதென்பது, ஒரு சில தலைவர்களால் தான் சாத்தியமாகும்!

இழிவுக்கு எதிர்ப்பு, சுரண்டலுக்கு எதிர்ப்பு—அறிவுக்குத் தடை போடும் குரூரத் தன்மைக்கு எதிர்ப்பு-மூன்று வேறு துறைகளில் கடந்த ஆண்டு ஜுலைத் திங்கள் 15-ம் நாளில் இந்தத் திராவிடம் தனது போராட்ட வல்லமையைத் தெளிவுபட — ஆதிக்கக்காரர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டது!

எதிர்ப்புக்கிலக்கான அத்தனையிலும் வெற்றி பெற்ருேம்!

கடந்த ஆண்டு ஜுலைத்திங்கள் 15-ம் நாளை இந்த ஆண்டில் நினைத்துப் பார்த்தால், ஏதோ கனவு கண்டவன் கண்களுக்கு வெளியுலகம் தெரிவதுபோல் இருக்கிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் ஆதிக்கக் கொடி நாட்டி அட்டகாசம் புரிந்த "சூராதிசூரர்கள்" எங்கே?

கடந்த ஆண்டு நிலவிய காட்டு தர்பார் எங்கே?

சென்ற ஜுலையில் அரக்க நடைபோட்ட கல்வித் திட்டம் எங்கே?

கொலையுண்ட ஜனநாயகத்தின் கோரத் துடி-துடிப்புத் தெரிகிறதா?

கடந்த ஜுலையில் ஆணவமாகப் பேசிய நேரு, ஆசியாவின் ஜோதி நேரு, இப்போதிருக்கும் 'திரிசங்கு' நிலை என்ன பரிதாபமாக இருக்கிறது?

அத்தனையிலும் தலைகீழ்மாற்றம்—மாபெரும் புரட்சி!

எதனல் ஏற்பட்டது இந்த நிலைமை?

நாம் நடத்திக் காட்டிய அணிவகுப்பு! அவைகளுக்குத் தலைமை வகித்த தோழர். கருணாநிதி அவர்களைப் போன்ற சுத்த வீரர்களின் தியாகம்! புற்றீசல்போலப் பறந்து வந்து போராட்டங்களில் பங்கு பெற்ற ஆயிரமாயிரம் கழகக்காளைகளின் நாட்டுப்பற்று!

எல்லாவற்றிற்கும் மேலாக, அறிஞர் அண்ணு அவர்களின் போராட்ட ஞானம்! அவருக்கு உறுதுணையாக நின்று திட்டங்கள் தீட்டித்தந்த நெடுஞ்செழியன், மதியழகன், சம்பத், நடராசன் போன்ற மற்ற முன்னணி வீரர்களின் ஆழ்ந்த அறிவு!

இந்த ஜுலை 15-ல் கடந்த ஜுலையின் நிழலை நினைவு படுத்திப் பார்க்கிருேம். அந்த நிழலில் நாம் தெரிந்து கொள்ளும்பாடம் என்ன?

போராடப் போதிய பலம் இருக்கிறது; பயிற்சி வாய்ந்த தளபதிகள் உளர். சாவுக்குத் துணிந்தவீரர்கள்ஏராளம்;சிறைக்கஞ்சாச் சிங்கங்கள், நாடு நெடுகிலும்! இந்தசாதனங்களத்தனையையும், நேரம்அறிந்து—அளவறிந்து உபயோகிக்கும் ஒப்பற்ற தலைவன் நம் மிடையில்—நமது தலைமுறையில் உலவுகிருர்; விடுதலைப் போருக்கு வேறென்ன தேவை?

சுவர் எழும்பிவிட்டது; அழகுச் சித்திரம் அதிலே வரையப்பட வேண்டும்!

தோழர்காள், நிமிர்ந்துநில்லுங்கள்! போராட்ட மயமான எதிர்கலத்தை வரவேற்க உறுதி பூணுங்கள்! தாயகம் விடுதலை பெறும்வரை, அண்ணுவின் அணிவகுப்பின் கீழ் அயராது பணி புரிவோம் என்று போராட்ட வைரம் பாய்ந்த இந்தப் பொன்னளில் சபதம் எடுத்துக் கொள்வோம்!


## முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6-0-0
ஆறு மாத சந்தா ரூ. 3-8-0

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

# பூபாளம்!

அரங்கண்ணல்
(திராவிட நாடு)

[illegible]

சகோதரர், எழுதச் சொல்லுகிறார்.

அந்திநேரம்...எதைப் பற்றி எழுதுவது?

வானத்தை அண்ணாந்து பார்க்கிறேன்—

என் தோழர்கள் சிந்திய இரத்தத்தை நினைவூட்டுகிறது.

பூமியன்னையைக் குனிந்து பார்க்கிறேன்—

'பொறுமை! அன்பு!!' என்று போதிக்கும் அண்ணாவை நினைவூட்டுகிறது.

எதைப்பற்றி, எழுதுவது?

ஃ ஃ ஃ

இதென்ன! இவ்வளவு விரைவில், ஓடிவிட்டதே, அந்திவானம். அதுகாட்டிய வர்ணஜாலங்கள் மறைந்தது எதைக் குறிக்கின்றன? இப்படித்தான், அட்டகாசம் செய்யும் ஆதிக்கக் காரர்களின் வாழ்வும் அஸ்தமிக்கும் எனபதையா! ஆம்—கூடகோபுரங்கள், மண்ணோடு கலந்தகதை, சரித ஏட்டில் ஏராளம். அந்திநேரம், சாயும்! ஆனல், அது நினைவூட்டிய என் சகோதரர்கள் சிந்திய இரத்தம் மாறாது;மறையாது; பூமியன்னையின் வயிற்றுக்குள் உறைந்து விட்ட, அத்துளிகள், ஒருநாளைக்கு எரிமலையினின்று எழும்பும் தீக்குழம்புகளாக வரும்! தீயோரை எரிக்கும்!.

இருளில் இருக்கிறேன், நான்! வானத்திலும் இருள் — என் அறையிலும் இருள். இன்று எப்படியோ, அப்படித்தான் இருந்தது, அன்று அண்ணாவும் மற்றும் ஐவரும் சிறைபட்ட போது!

ஃ ஃ ஃ

மின்னிச் சிரிக்கும் விண்மீன்களைப் பார்க்கிறேன்—

இருளில் கிடக்கும் என்னைக் கேலி செய்வதுபோல இருக்கின்றன!

"சிரிக்காதீர்கள்! வானத்தில் தொத்தியிருக்கிறோமென்கிற மமதையா? எட்டிப் பிடிக்க முடியாத தொலைவிலிருக்கும் நீங்கள் கூட மண்ணை நோக்கி அறுந்து விழுவதுண்டு!'' என்று ஆத்திரமாக கூவலாம் போலிருக்கிறது. கெக்கலிக்கும் விண்மீன்கள், வானத்தில்! அன்று — நாட்டிலும், பலர் அப்படித்தான், சிரித்தனர், சீமான்கள், அவர்கள்! மாடியிலிருக்கிறோம் எனும் மமதை கொண்டவர்கள்!!

இருட்டு எப்போதுமா இருக்க முடியும்? அதோ, ஆனந்தப் வனி வருகிறான், சந்திரன். தாரகைகளின் தளுக்கு வேலைகள், சாய்ந்து போய்விட்டன. நிலவு, வானில்! என் அறையிலும் தான்!!

இந்தநிலவைப் பிடித்து சங்கிலி போட்டு, வீட்டுக்குள் பூட்டிவைக்க முயலலாமா? முடியாது! முடியாது!! ஏழையின் கீற்றுச் குடிசைக்கும் ஏழடுக்கு மாடிக்கும் அச்சமின்றி அதன் கிரணங்கள் செல்லும். அதனை அறியாது, சிறைக் கம்பிகளையும், கற்கோட்டையையும் தயாரித்திடும் 'பைத்யங்களும்' இருக்கிறார்களே—நாட்டில்.

சிரிப்பு, வருகிறது, எனக்கு! ஆனல், அன்று!! — அழுவேன் மகிழ்வேன், ஆடுவேன், உட்காருவேன், அப்பப்பா! அந்த நாள் —ஜூலை 14ம் நாள் —என்ன பாடு பட்டது, இதயம்!!

ஃ ஃ ஃ

தந்திமேல் தந்தி!
செய்திமேல் செய்தி!
'நம்நாடு' அலுவலகம்,
போர்க்கூடாரம் போல்
இருந்தது.

என்னை 'இருத்திவிட்டு', நானும் தோழர்களும், ஏங்கி நிற்க, எல்லோரும் போய்க் கொண்டே இருந்தார்கள், சிறைக்கு! பட்டியலை எழுதும் போது, ஒரு ஆனந்தம்-சிந்தப் பட்ட இரத்தத்தை எண்ணிய போது கலக்கம்-உயிர் போயிற்று என்ற செய்தி கேட்டபோது ஒரு ஆவேசம்-அடடா! அந்த நாள், திராவிட வீரருக்கோர், தேன் தினம்—தித்திப்பு நாள்—வீரத்தேதி.

ஃ ஃ ஃ

எங்கோயிருந்து கோட்டான் கூவுகிறது!—இருளைக் கிழிக்கும் இந்த நிலவு, ஏன் வந்ததெனும் எரிச்சல் போலும். கனிமரம் கண்டால் தாவும் வௌவால்களும் சிறகடிப்பது கேட்கிறது, காதில்! கோட்டானும் வௌவாலும் பறவையினங்களில் மட்டுமா? மனிதர்களிலும் தான் 'கணக்கைத் தீர்ப்பேன்!'-என்று கர்ச்சித்தார், ஆச்சாரியார்.

'சரியோ! இந்தப் போராட்டம்!!'—என்றனர், சிலர்.

சலசலப்பு! எரிச்சல்!!—வீரப் படை, திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. திணவெடுத்த தோள்களே! தோழர்காள்! என்று கர்ச்சித்தபடி, சென்று கொண்டேயிருந்தனர், அன்று. அந்த வீரம், திராவிட ஏட்டில், குறிக்கப்பட்டுவிட்டது. கூவலும், கொக்கரிப்பும் —தென்படவில்லை, இன்று!

இலைகள் உதிர்கின்றன! நாட்களும், அப்படித்தான்.

ஆனல், விடுதலை ஏடு, பழுத்த இலையல்ல —தங்கத்தால் செய்யப் பட்டது. சாகாது! அழியாது!! நாட்கள் ஓடிவிடலாம், ஆனல் தியாகதினங்கள் பிறந்து விட்டால், சாவதில்லை. அந்த ஒப்பற்ற ஓர்தினத்தைத்தான் பெற்றோம் —தந்தகாணிக்கை பெரிது! ஆறுஉயிர்கள் —கையிழந்தோர் —காலிழந்தோர் — உறுப்பிழந்தோர்—நமது நெஞ்சத்து நிலவுகள்! இருள் நீக்கவந்த வீரர்கள்!! கோழி கூவுகிறது! வெளியில் பார்த்தால் ஒரே புகைமயம்.

சுட்டெரிக்கும் தீயைவிட, அணைத்து வளைக்கும் புகை ஆபத்தானது.

தற்காப்பு தேவைதான்! வெளியில் பார்ப்போம்.

புகையல்ல, அது; மூடுபனி! பிறர் வளர்வதைக் கண்டு பொறுக்காதவர்கள் சிந்திடும், எச்சில் துளிகள். இவையென்ன செய்யமுடியும்? விடுதலைச் சூரியன் அரும்பியதும், இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இதை, சீ!—எனத் தள்ளுவோம்! தியாகதினத்தை நினைப்போம்; தியாக தினங்களைச் சந்திக்க விரைவோம்! தீரர்களின் முழக்கம், அதோ — காற்றில் கலந்து வருகிறது, பூபாளம்! காலை மலரப் போவதன், அறிகுறி!! எழுவோம்.

## ஆணுக்கொரு...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தேன். என் மழலையோ என்னை இறுக அணைத்துக் கொண்டிருந்தான். என் நல்ல காலம் என்று எண்ணுகிறேன், ஒருவரும் என்னைக் கவனித்ததாகத் தெரியவில்லை. மறுநாள் காலையில்தான் விபரமறிந்தேன் வீட்டுக்காரிஅன்று என்னை விலை பேசவில்லை என்று.

பகல்பூராவும் அவள் எனக்குப் பாடம் ஓதினள்; நான் பல்லைக் கடித்தேன்; புருவத்தை உயர்த்தினேன் — பணிய மறுத்தேன் —சத்தம்போட்டு ஜனங்களைக் கூட்டுவேன் என பயமுறுத்தினேன். பட்டினிபோட்டாலும் பாதகமில்லை என்று கெஞ்சினேன். இதோ நிற்கிறானே. சாட்சியம் சொன்ன இந்த கிருதாமீசைக்காரன், அந்த வீட்டுக்குச் சேனதிபதி—தகராறு வந்தால் தாண்டிக்குதிப்பான், யாராவது அடம்பிடித்தால் அடித்து நொறுக்குவான். இவன் வசம் நான் ஒப்புவிக்கப் பட்டேன். இவன் அன்று, பெரிய கோவில் பக்கம் சாமிதரிசனம் செய்யலாமென்று அழைத்து வந்தான். அவனுக்கு என்மனப் பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்து விட்டு, கூடவே கோவிலுக்கு வந்தேன். கோவிலருகே வரும் போது, இவனது வாடிக்கைக் கார பெரிய மனிதனொருவன் அங்கே வந்தான். பரம்பரைப் புத்தி — சாமிசந்நிதானத்திலேயே என்னைப் பற்றி இருவருக்கும் பக்திப்பூர்வமான உரையாடல் நடந்தது. அவனிடம் என்னை விலைபேசினன். நான் மறுத்தேன். பெரிய மனிதத்தன்மையையும் மறந்து ஆசை வார்த்தைகளை அங்கேயே அள்ளிக் கொட்டினன். என்கையைப் பிடித்து இழுக்கா ததுதான் பாக்கி—கூட்டம் சேர ஆரம்பித்தது. அந்தப் பக்தன் மெதுவாக நழுவப்பார்த்தான். அங்கே வந்த போலீஸ்காரரிடம் இந்த கிருதா மீசையும், அந்தப் பக்திபாசுரமும் ரகசியமாக ஏதோ சொன்னர்கள். உடனே என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று லாக்கப்பில் வைத்தார்கள். இதுதான் நடந்தது.

நான் விபச்சாரத்துக்கு அழைத்ததாக அந்த மீசைக்காரன் சொன்னனே ஞாயமா இது? அவன் செய்த அக்ரமச் செயலை சட்டத்தின் துணையால் பூசி மறைக்கிறான். விபசாரத்துக்காக தண்டிக்கப்பட வேண்டியவர்கள் கோர்ட்டுக்கு வராத பெரிய மனிதனும், கோர்ட்டுக்கு வந்துள்ள கிருதாமீசையும். ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா? அபலைப்பெண்களை, அநாதைகளை, ஆண்டவனை நம்பிக்கிடக்கும் ஆதரவற்றவர்களை, வலியச் சென்று விபசாரத்துக்கு அழைக்கும் ஆண்களை, இன்றைய சட்டம் விட்டு விட்டு வேடிக்கை பார்க்கிறது. அது மட்டுமல்ல, அவர்களைச் சாட்சியாக சத்தியப் பிரமாணத்தின் மீது விசாரிக்கிறது. ஆனல், பெண்களை மட்டும் விபசாரிகளென இரக்கமற்ற சமுதாயமும், அதற்கு ஆமாமென ஒத்தூதும் சட்டமும் தீர்ப்பளிக்கின்றன. இது எந்த விதத்திய நீதியோ தெரியவில்லை. நீதிதேவன் அவர்களே, தங்கள் தீர்ப்பு தர்மஞாயத்திற்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டுமென மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.''


இந்தச்சோக வரலாற்றை, கண்ணீரும் கம்பலையுமாக சொல்லி முடித்தாள்.

நீதிபதி உடனே, உன்பக்கம் சாட்சிஉண்டா? என்றார். மறுபடியும் ஆண்டவனையே சாட்சிக்கழைத்தாள், அந்த அபலை. கோர்ட்டில் கொல்லென்ற சிரிப்பொலி எழும்பிய தேதவிர ஆபத்பாந்தவர்களோ, அனத ரட்சகர்களோ யாரும் வரவில்லை.

கடைசியில் நீதிபதி தீர்ப்புக் கூறும்போது, போலீஸார் கொண்டுவந்த சாட்சியத்தின் வலிமையால், கண்மணியைக் குற்றவாளி என தீர்மானித்து, அவளுடைய இளவயதை உத்தேசித்து அவளை 3 ஆண்டு பாதுகாப்பு விடுதிக்கு அனுப்பி வைத்தார். விபச்சாரக் குற்றம் பெண்கள் மீதுதானே ஒழிய ஆண்கள் மீது அந்தக் குற்றத்தைச் சுமத்த விபச்சாரத்தடை சட்டம் இடந்தரவில்லை என்ற ஒரு குறிப்பையும் காட்டியிருந்தார்.

# இலட்சியத் திரு விளக்குகள்

★



புதுயுகத்தைப் படைக்கும் புரட்சிக் கருவிகளிலே கலையும் ஒன்று. அந்தக் கலைத்துறை மூலம் அறிவுப் பிரச்சாரம்செய்ய முடிகிறது. அந்த நம்பிக்கையை அனைவருக்கும் அளித்த அறிஞர் நமது அண்ணா தான். புதிய பூமியெனப் போற்றப்படும் ரஷ்ய நாடு கலையையும், கலைப்பெருமக்களையும் ஆதரிக்கிறது. கலைக்கென ஒரு அமைச்சரே உண்டு அங்கே—இங்கும் அந்நிலை எய்த நாமிருக்கும் நாடு நமதென்னும் நிலைபெற வேண்டும்.

**—சிவாஜி—கணேசன்**

★



முன்னொரு காலத்திலே நடிகர்கள் எல்லாம் உலகத்தைப் பற்றிக் கவலைப்படாத புது ஜாதியாக இருந்தார்கள். கூத்தாடி என்ற அழகான தமிழ்ச் சொல் நடிகர்களை கிண்டல் செய்யவே பயன் படுத்தப்பட்டது. கண்ணீர்த் துளியைக்கூட இப்போது கிண்டல் செய்கிறார்கள், அதன் சக்தியை உணர முடியாதவர்கள். நடிக சமுதாயமும் நாடு காக்கும் புதிய சக்தியாக இப்போது மாறி விட்டது.

இந்த சக்தி கலைத் துறையிலே மட்டுமின்றி நாட்டு விடுதலைத் துறைகள் அனைவற்றிலும் பயன் படுத்தப்படக் காரணமாக அமைந்த நமது அண்ணா அவர்களை தமிழகம் மறவாது! வணங்கத் தவறாது!

**— டி. வி. என்.**

★

"நடிகர்கள் சமூகப் பணி புரிவது சாத்தியமா? அந்தப் பணி புரிய அவர்கள் சரியானவர்களா?" இப்படியும் சிலர் கேட்கிறார்கள். ஒரு சமுதாயம் சீர்திருத்தப் படத் தேவையான கருத்துக்களை எழுத்தாலும், பேச்சாலும் பரப்புகிறார்கள். மக்களிடையே அப்படிப் பரப்பப் படுகிற கருத்துக்கள் எழுத்து, பேச்சு இவற்றின் மூலமாகப்பரவுவதைக்காட்டிலும்ஆழமாக மக்கள் மனதில் பதிய வைக்கப்பட முடியும் நடிப்பால்.

**—கே. ஆர். ராமசாமி.**


★



நடிகனுக்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லையாம்—அட பரிதாபமே! நடிகன் என்றால் அவன் மனிதனில்லையா? அவன் நாட்டுப் பிரஜைகளில் ஒருவனில்லையா? அவன் வரி கட்டவில்லையா? அவன் கட்டும் வரிப்பணம் செல்லாக்காசா? நடிகன் அரசியல்வாதியாக இருக்கலாம். இருக்கும் உரிமையை யாரும் தடுக்க முடியாது. நடிகன் மேடையிலே மட்டும் வீரனல்ல!—நாடுமீட்கும் போர்க் களத்திலும் லட்சியக் கொடி பிடிக்கும் கொள்கை வீரனாக அவன் இருக்கலாம்—இருக்க முடியும். நல்லபுகழ் பெற்ற நடிகன் என்ற பெயர் பெறுவது மட்டுமல்ல என் லட்சியம்; நாட்டுக்கான போரிலே ஒரு தொண்டன்—என்றபட்டம் பெற வேண்டுமென்பதும் என் தணியாத லட்சியம்! ஏன்; அதுவே என் மூச்சும் கூட!

**— ராஜேந்திரன்**


★



திராவிடன் என்று கூறிக் கொள்வதிலே நான் பெருமையடைகிறேன். திராவிட சமுதாயத்தின் மேன்மைக்கும், தாயகத்தின் விடுதலைக்கும் போராடும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே நானும் ஒரு உறுப்பினன் என்று சொல்லிக் கொள்வதிலே பூரிப்படைகிறேன். அறிவுப் படை தந்த அண்ணாவின் அணிவகுப்பிலே நானும் இருக்கிறேன் என்று எண்ணும்போது உற்சாகமடைகிறேன்.

**—எம். ஜி. ஆர்**

★



நகைச் சுவை மூலம் நல்லவிஷயங்களைச் சொல்லலாம் என்பதை முதன் முதல் செயல் மூலம் காட்டிய பெருமைக் குரியவர் கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் தான். அவரது பாதையிலே நானும்பணிபுரிகிறேன்— அண்ணாவின் பாசறையிலும் பயிற்சி பெறுகிறேன். இது எனக்குத் தான் பெருமை. எனக்குப் பேசத் தெரியாது. ஊமையல்ல! மேடையில் என்று சொல்கிறேன். அதிகமாக எழுத ஆசைபட்டேன்—144 போட்டு விட்டார்கள்—முரசொலியில் இடமில்லையாம்! பரவாயில்லை—ஒரு விஷயம்—திராவிடத்தில்—ஆரிய— திராவிட கலாச்சாரங்கள் "கலப்பட"மாக இருக்கக்கூடாது!

**— எம். என். கிருஷ்ணன்**



பத்திரிகைகள் இல்லாமல் அரசாங்கம் அல்லது அரசாங்கம் இல்லாமல் பத்திரிகைகள். எதை விரும்புகிறாய் என்று என்னைக் கேட்டால் ஒருகணமும் தயங்காமல் விடைகூறுவேன் அரசாங்கம் இல்லாவிடினும் பத்திரிகைகள் தான் வேண்டுமென்று!

**—தாமஸ் ஜெப்பர்சன்**

மு. க. வின்
புதையல்
புதிய தொடர் கதை
ஆகஸ்ட் 6ம் தேதி இதழில்
ஆரம்பமாகிறது

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62. எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.